Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk



# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JANUARY 14 2025



**பொங்கல் திருநாளை கொண்டாடும் உலக வாழ் மக்களுக்கும், எமது வாசகர்களுக்கும் தமிழ்மிரரின் பொங்கல் வாழ்த்துக்கள்**

செவ்வாய்க்கிழமை ஜனவரி 14,2025 | ஒளி: 10 கதிர் 136 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

# இந்து கைதிகளை பார்வையிட வாய்ப்பு

தைப்பொங்கல் பண்டிகையான செவ்வாய்க்கிழமை (14) சிறைச்சாலைகளில் உள்ள இந்துமத கைதிகளைப் பார்வையிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகளில் உள்ள இந்துமத கைதிகளைப் பார்வையிட வரும் உறவினர்களால் கைதியொருவருக்கு தேவையான அளவு, உணவுப் பொருட்கள் மற்றும் இனிப்புகளை எடுத்து வர முடியும் என சிறைச்சாலைகள் ஆணையாளரும் பேச்சாளருமான காமினி பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், அனைத்து சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் சிறைக்கைதிகள் பார்வையிடும் விதிமுறைகளுக்கு அமைய நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடைத்தரகர்களிடமிருந்து

# “விவசாயிகளை காப்பாற்ற வேண்டும்”

## யாழ்ப்பாணத்தில் நெற்செய்கை என்பது வான் பார்த்த பயிராக உள்ளது

■ பு.கஜிந்தன்

இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான சந்தை விலை கிடைக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் பொருளாதார மத்திய நிலையங்களை இந்த ஆண்டு மீளத் திறப்பதற்குத் திட்டமிட்டு வருகிறோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

‘மறவன்புலோ கமக்கார’ அமைப்பின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழாவும் கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் திங்கட்கிழமை (13) இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில் தெரிவித்துள்ளதாவது,

தொடர்ச்சி P2



# “தைப்பொங்கல் மரபை பிரிக்கமுடியாது”

“அறுவடைத் திருநாள்” என்று பொருள்படும் தைப்பொங்கல், உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மற்றும் இந்துக்களால் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படுகிறது. நிறைவான அறுவடைக்கு பங்களித்த சூரியன், பூமி, மழை மற்றும் பசுக்கள், உபகரணங்களுக்கு நன்றி செலுத்துவது இந்த நாளின் சிறப்பம்சமாகும். இந்த விழா‘தை’ மாதத்தின் முதல் நாளில் கொண்டாடப்படுகிறது என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தனது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# “தைப்பொங்கல் தினத்தில் உறுதிகொள்வோம்”

ஒருவரை ஒருவர் மதித்தல் மற்றும் கைமாறு மறவாத உன்னத பண்புகள் என்பனவற்றைக் கொண்ட தமிழ் மக்களால் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் கொண்டாடப்படும் தைப்பொங்கல் பண்டிகையானது உண்மையான கலாச்சார மதிப்பீடுகளை இவ்வுலகிற்கு எடுத்துரைக்கின்றது என பிரதமர் ஹரிணி அமரசூரிய விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# ஜனாதிபதி அனுரகுமார சீனாவுக்கு பயணமானார்



நான்கு நாள் உத்தியோகபூர்வமாக சீனாவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக திங்கட்கிழமை (13) பிற்பகல் நாட்டிலிருந்து பயணமாகியுள்ளார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின்(Xi Jinping) அழைப்பின் பேரில், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க செவ்வாய்க்கிழமை (14) முதல் 17 ஆம் திகதி வரை சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கிறார்.

தொடர்ச்சி P2

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி போராட்டம்

■ ஏ.எச் ஹஸ்பர், கீத்

விசாரணை எனும் பெயரில் சிறைகளில் பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி கையெழுத்து போராட்டம் திருகோணமலை சிவன் கோயிலடிக்கு முன்பாக போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை (13) இடம் பெற்றது

தொடர்ச்சி P2



# “முறையாக உள்வாங்குவது நமது பொறுப்பாகும்”

தைப்பொங்கல் என்கிற அறுவடைத் திருவிழா உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களால் கொண்டாடப்படும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். மரபு ரீதியாக அறுவடைக் காலத்தில் கொண்டாடப்படும் இந்த விழா நன்றியுணர்வு மற்றும் செழிப்புடன் தொடர்புடையது. தைப்பொங்கலின் உண்மையான பொருளை புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவிதுள்ளார்.

தொடர்ச்சி P2





# 200 போதை மாத்திரைகளுடன் யாழில் இரு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பகுதியில் சுமார் 200 போதை மாத்திரைகளுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான இரு இளைஞர்களை ஞாயிற்றுக்கிழமை (12) இரவு பொலிஸார் சோதனையிட்ட போது , அவர்களிடம் இருந்து 200 போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்து, இரு இளைஞர்களையும் கைது செய்த பொலிஸார் அவர்களை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்..

# கெலிஓயா மாணவி அம்பாறையில் மீட்பு

■ பாறுக் ஷிஹான்

கண்டி கெலிஓயா அம்பரப்பொல பகுதியில் வைத்து, சனிக்கிழமை (11) கறுப்பு நிற வாகனத்தில் கடத்தப்பட்ட 18 வயதான பாடசாலை மாணவி அம்பாறையில் வைத்து, திங்கட்கிழமை (13) மீட்கப்பட்டுள்ளார்.

அத்துடன், மாணவியான பாத்திமா ஹமீரா என்பவரை கடத்தி 50 இலட்சம் ரூபாய் கப்பம் கோரிய 31 வயதுடைய மொஹமட் நாசர், அம்பாறை பொலிஸாரால் பாடசாலை மாணவியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



# கரும்புக்கு தட்டுப்பாடு.

■ துவாரகஷன்

உலக வாழ் தமிழர்கள் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை (14) தைப் பொங்கலை கொண்டாடவுள்ள நிலையில், மலையகத்தில் கரும்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உழவர்கள் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாகவே தைப்பொங்கல் விழாவாக கொண்டாடுகின்றனர்.

தொடர்ச்சி P2



# போயாவுக்கு மதுபானம் விற்றவர் கைது

## கிடைத்த தகவலின் அடிப்படையில் திடீர் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது

■ நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்குப் பகுதியில் போயா தினமான திங்கட்கிழமை (13) காலை சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்த இடமொன்று முற்றுகையிடப்பட்டுள்ளதுடன், இச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போயா தினத்தன்று மதுபானம் விற்பனை செய்யப்படுவதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு இரகசிய தகவலொன்று கிடைத்துள்ளது.

தொடர்ச்சி P2

# மோப்ப நாயுடன் சுற்றிவளைப்பு; 102 பேர் ஹட்டனில் சிக்கினர்

இராணுவமும் ஹட்டன் பொலிஸாரும் இணைந்து ஞாயிற்றுக்கிழமை (12) மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றங்களுக்காகத் தேடப்பட்டுவந்த 102 நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஹட்டன் பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் பிரணதீப் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஹட்டன் பொலிஸ் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஹட்டன், வட்டவல, கினிகத்தேன, பொல்பிட்டிய, நோர்டன் பிரிட்ஜ், நல்லத்தண்ணி, மஸ்கெலியா,

தொடர்ச்சி P2





# கரையொதுங்கிய சிலை

■ எஸ்.தில்லைநாதன்

கண்ணன் மற்றும் ராதை ஆகிய இருவரும் இணைந்து ஜோடியாக இருக்கும் சிலை ஒன்று வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது.

அண்மைக்காலமாக கால நிலையில் ஏற்பட்ட மாற்றங்களினால் கடல் சீற்றங்கள் சூறாவளி புயல்கள் தென்கிழக்கு ஆசியாவின் பல நாடுகளில் ஏற்பட்டது அதன்போது இந்தோனேசியா, மலேசியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் இருந்து வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த சிலையைப் பார்வையிடுவதற்காக அதிகளவான மக்கள் குவிந்துள்ளனர்.



# மூளைக் கட்டிகளை காண புதிய கருவி கண்டுபிடிப்பு

## பல்கலைக்கழக மாணவன் வரதராஜன் டிலக்சன் சாதனை

■ வி.ரி.சகாதேவராஜா, பாறுக் ஷிஹான்

மூளையில் உள்ள கட்டிகளை அடையாளம் காண்பதற்கு புதிய இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக மாணவன் வரதராஜன் டிலக்சன் இக் கண்டுபிடிப்பை நிகழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

இவர் நிந்தவூரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் தொழில்நுட்ப பிரிவில் கல்வி பயின்றவராவார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# “விவசாயிகளை காப்பாற்ற வேண்டும்”

தற்போதைய காலநிலை மாற்றம் விவசாயிகளுக்கு பெரும் சவாலாக மாறியிருக்கின்றது. முன்னைய காலங்களில் நெல் அறுவடையின் போது மழை பெய்வதில்லை. ஆனால் இப்போது மழையின் பாதிப்பை நாம் எதிர்கொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சில நாட்களுக்குள் கடும் மழை பெய்தபோதும், தெய்வாதீனமாக மிகப் பெரிய அளவில் நெல் அழிவு ஏற்படவில்லை. அந்த மழை மற்றும் இப்போதும் பெய்யும் மழை என்பனவற்றால் உங்களின் வயல் நிலங்கள் ஈரலிப்பாக உள்ளன. எனவே, இதை விவசாயிகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நெல் அறுவடை முடிந்த பின்னர் சிறுதானியங்களைப் பயிரிடுங்கள். அதற்கான விதைகளை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம், பிரதம செயலாளர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களும் குளத்தை நம்பி இரு போகத்தை மேற்கொள்கின்றன.

யாழ்ப்பாணத்தில் நெற்செய்கை என்பது வான் பார்த்த பயிராக உள்ளது. மழையை நம்பி ஒரு போகம் மாத்திரமே செய்கின்றோம். எனவே, தற்போது உள்ள காலநிலையின் மாற்றத்தைப் பயன்படுத்தி சிறுதானியப் பயிர் செய்கையில் ஈடுபட்டு விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

எமது மண்ணின் தன்மைக்கு ஏற்பவும், எந்தப் பயிரை உற்பத்தி செய்தால் ஏற்றுமதி செய்யலாம் என்பதையும் ஆராய்ந்து அதற்கு ஏற்ப விவசாய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டும். அதற்கு விவசாயத் திணைக்களம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றைய தினம் நெல் அறுவடையுடன் சேர்த்து மூத்த விவசாயிகளைக் கௌரவித்திருந்தீர்கள். அதற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

இன்று இளையோர் விவசாயத்தில் நாட்டம் குறைந்தவர்களாக மாறிவிட்டார்கள். வெளிநாட்டு மோகத்தில் அவர்கள் சிக்கியிருக்கிறார்கள். அங்குச் சென்ற பலர் இப்போது நாட்டுக்குத் திரும்பிக் கொண்டு இருக்கிறார்கள்.

எங்கள் இளையோர்கள் விவசாயத்தில் இறங்கினால் நாம் உற்பத்தியில் சிறப்பான இடத்தை பெற முடியும். வடக்கு மாகாணத்தில் என்ன வளம் இல்லை? இலங்கையின் ஏனைய மாகாணங்கள் உடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்தில் உள்ளதுபோன்று வளங்கள் ஏனைய மாகாணங்களில் இல்லை. ஆனால், அதை உரிய வகையில் நாங்கள் பயன்படுத்தத் தவறி இருக்கிறோம்.

விவசாயமும், கடற்றொழிலும் எமது மாகாணத்தின் முக்கியமான பொருளாதாரத் தூண்கள். அவை இரண்டையும் சார்ந்த தொழிற்சாலைகள் எமது பிரதேசத்தில் எதிர்காலத்தில் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த உற்பத்திப் பொருட்களை பெறுமதி சேர் பொருட்களாகவும் மாற்றியமைக்க முடியும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெய்வநாயகி பிரணவன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கைதடி பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.கபில்ராஜும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “தைப்பொங்கல் மரபை பிரிக்கமுடியாது”

சூரியனின் வடக்கு நோக்கிச் செல்லும் ‘உத்தராயணம்’, தைப்பொங்கல் நாளில் தொடங்குகிறது. புதிய திசையை நோக்கிச் செல்லல், மனித சமூகத்தின் உள்ளக-வெளிப்புற சகவாழ்வு என்பனவே தைப்பொங்கல் பண்டிகையின் அர்த்தமாகும்.

இந்த நாட்டு மக்களின் நற்பண்புகள், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை மேம்படுத்தி சமூக மாற்றத்திற்கான ஆரம்ப முயற்சியாகவும், சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறைக்கான புதிய ஒரு திசையின் தொடக்கமாக ‘கிளீன்ஸ்ரீலங்கா’ திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமயத்தில், தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. வரலாற்று ரீதியாக வேரூன்றிய ஆசிய மரபுகளில் மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான பிணைப்பு பிரிக்க முடியாதது. தைப்பொங்கல் தினத்தால் வெளிப்படுத்தப்படும் அந்த மரபுகள் இந்த திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

அதேபோல், தைப்பொங்கல் கொண்டாட்டம் மக்களின் கலாச்சார வாழ்வில் புதிய நம்பிக்கைகளைக ட்டியெழுப்புகிறது. நாட்டில் உருவாகியுள்ள புதிய உத்வேகத்துடன், இலங்கையர்களாகிய நம் அனைவருக்கும், “அழகான வாழ்க்கை” என்ற நம்பிக்கையை நம் இதயங்களில் சுமந்து, புத்தாண்டில் புதிய உற்சாகத்துடன் முன்னோக்கிக் கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்காக சுற்றுச்சூழல் முன்னேற்றத்திற்கு உகந்த முன்னுரிமை அளிக்கும் ஒரு புதிய கலாசார நெறிமுறை இருப்பை உருவாக்குவதன் மூலம் நிலையான அமைதி, நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் தலைமை பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலை நாங்கள் ஏற்கிறோம்.

நாட்டிற்கும் மக்களுக்கும் பல நல்ல விடயங்களை நிறைவேற்ற உறுதிபூண்டு, நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாங்கள், அந்த வாக்குறுதிகளை தடைகளுக்கு மத்தியிலும் பின்வாங்காத துணிச்சலுடனும் அசைக்கமுடியாத உறுதியுடனும் நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளோம். இந்த நாட்டு மக்களின் முகங்களில் நீடித்த புன்னகையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட இந்த செயற்பாட்டில், புதிய அணுகு முறைகளுடன், ஒற்றுமையுடனும் பங்கேற்புடனும் ஒன்றிணைய உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன். சுபமான ஆரம்பத்திற்கு இந்தப் பொங்கல் கொண்டாட்டம் பாரிய ஆசீர்வாதமாக அமைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்.

இலங்கை மற்றும் உலகளாவிய இந்துபக்தர்கள் அனைவருக்கும் நல்லிணக்கம் மற்றும் நன்றியுணர்வு நிறைந்த, வளமான மற்றும் மகிழ்ச்சியான தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள் என்று தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# போயாவுக்கு மதுபானம் விற்றவர் கைது

இதற்கமைய புலனாய்வு பிரிவினரும் யாழ்.மாவட்ட போதை ஒழிப்பு பிரிவினரும் இணைந்து அப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர். இதன்போதே, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது பெரும் எண்ணிக்கையிலான மது போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபானமும் சந்தேக நபரும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# “முறையாக உள்வாங்குவது நமது பொறுப்பாகும்”

விவசாய வாழ்க்கை முறையில், ஒருவரின் பொருளாதாரத்தையும் வாழ்க்கையையும் வலுப்படுத்தி, பயிர்களை செழிப்பாக்க உதவிய சூரியன், மழை, இயற்கை மற்றும் கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம், நன்றி செலுத்துதல் என்ற பெரிய பாடம் கற்பிக்கப்படுகிறது, இதனை எதிர்கால சமுதாயத்தில் முறையாக உள்வாங்குவது நமது பொறுப்பாகும்.

ஒரு நாட்டின் மக்களுக்கான பொறுப்பை ஏற்றுள்ள ஆளும் கட்சிக்கு, பொதுமக்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவது என்பது, அந்த அதிகாரத்தை வழங்கிய மக்களுக்கு செலுத்தப்படும் நன்றி மற்றும் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும் என்பதை தைப்பொங்கல் விழாவின் உட்பொருளை சரியாக புரிந்துகொள்வதன் மூலம் உணரலாம்.

ஆரம்பத்தில் விவசாய சமூகத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த இந்த விழா, இன்று இன, மத வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தமிழ் மக்களின் தேசிய விழாவாக மாறியுள்ளது.

பல்மத, பல்லின, பல்மொழி சமூகம் கொண்ட நமது தாய்நாட்டில், பன்முகத்தன்மையில் ஒற்றுமையை ஊக்குவிக்கும் மற்றொரு தேசிய விழாவாக தைப்பொங்கல் விழாவை ஒன்றிணைந்து கொண்டாடுவது நமது கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்க உதவும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட தைப்பொங்கல் விழாவை கொண்டாடும் இலங்கை வாழ் சகோதர சகோதரிகளுக்கு பெரும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மோப்ப நாயுடன் சுற்றிவளைப்பு; 102 பேர் ஹட்டனில் சிக்கினர்

நோர்வூட் மற்றும் பொகவந்தலாவை பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகள், இராணுவத்தினருடன் இணைந்து ஞாயிற்றுக்கிழமை (12) இரவு 7 மணி முதல் 10 மணி வரை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

ஹட்டன் பொலிஸ் பிரிவு நாய் பிரிவின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் போது. போக்குவரத்து விதிகளை மீறிய 67 பேர், குடிபோதையில் வாகனம் ஓட்டிய 02 பேர், சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் மதுபானம் பயன்படுத்திய 13 பேர் மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளாத20 பேர் மீது ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவம் மற்றும் பொலிஸ் சிறப்பு நடவடிக்கைப் படையினரை உள்ளடக்கிய இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

# “தைப்பொங்கல் தினத்தில் உறுதிகொள்வோம்”

நாற்று நடுவது முதல் விளைச்சலை அறுவடை செய்வதுவரை விவசாய நடவடிக்கைகளுக்கு சூரிய பகவான் உட்பட இயற்கை ஜீவராசிகள் அனைத்தும் செய்யும் உதவிகளுக்கு நன்றி செலுத்தவே இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது .

நாம் அனைவரும் இயற்கையின் படைப்புக்கள். இயற்கையை மீறி எம்மால் எந்த பயணத்தையும் மேற்கொள்ள முடியாது. இதனால் இயற்கையினூடாக எமக்கு கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங்களுக்கு கைமாறு செய்வது மிகவும் உன்னதமான மனிதப் பண்பாகும். நாடு என்ற அடிப்படையில் நாம் விசேட மைல்கற்களை எட்டியுள்ளோம். கட்டமைப்பு மற்றும் கொள்கை ரீதியிலான மாற்றம் உட்பட, மனநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி மறுமலர்ச்சி யுகத்தை நோக்கி நாட்டைக் கொண்டு செல்லும் பாரிய மற்றும் பாரதூரமான பொறுப்பு எமக்கு உள்ளது. அரசாங்கம் மற்றும் அரசு என்ற அடிப்படையில் நாம் அந்த சவால்கள் நிறைந்த மற்றும் பொறுப்புவாய்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்து பரிணாம மாற்றத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளோம்.

அவ்வாறான தருணங்களில் இயற்கையைப் போற்றி அதற்கு நன்றி செலுத்தும் இத்தகையதொரு அற்புதமான பண்டிகையைக் கொண்டாடுவது, மீண்டுமொரு முறை கலாச்சார ரீதியிலான செழிப்பான பிரஜைகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமையும். ஒருவரையொருவர் மதித்தல் மற்றும் மற்றவர்களின் மதம், கலாச்சார உரிமைகளை மதிக்கும் விசேட மனித பண்புகள் மற்றும் நல்லிணக்கத்தில் பூரணமடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு இந்த தைப்பொங்கல் தினத்தில் நாம் மீண்டுமொரு முறை உறுதிகொள்வோம்.

தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் இலங்கை வாழ் மற்றும் உலக வாழ் தமிழ் சமூகத்தின் அனைத்து பிரார்த்தனைகளும் நிறைவேறும் மகிழ்ச்சிகரமான தைப்பொங்கல் தினமாக இன்றைய தினம் அமைய வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன் என்றும் அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரும்புக்கு தட்டுப்பாடு.

மலையக மக்களும் இத்தினத்தில் சூரிய பகவானுக்கு சூரிய பொங்கல் வைத்தல் ஆலயங்கள் மற்றும் வீடுகளில் விசேட பூஜைகள் நடத்தி வழிபாடுகளில் ஈடுபடுதல் சுப காரியங்களை நடத்துவது என பல்வேறு நிகழ்வுகளை இத்தினத்தில் முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகள் நடத்தும் போது, கரும்பு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. பூஜை வழிபாடு செய்வதற்கு வீடுகள், ஆலயங்கள் மற்றும் வேலைத்தளங்கள் ஆகியவற்றை அலங்கரிப்பதற்கு இந்துக்கள் கரும்புகளை பயன்படுத்துகின்றனர்.

இருந்த போதிலும், கரும்பு தட்டுப்பாடு காரணமாக இவ்வாறான விடயங்களை முன்னெடுக்க முடியாத சூழ்நிலைக்கு மலையகத்தில் வாழும் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

வர்த்தகர்கள் கரும்புகளை வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு நகரங்களில் விற்பனை செய்கின்றனர்.

கரும்பு ஒரு ஜோடி 350 முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

உதாரணமாக ஒரு தோட்டத்தை எடுத்துக் கொண்டால் 300 வீடுகள் காணப்படுகிறது. ஒரு வீட்டுக்கு இரண்டு என்ற அடிப்படையில் கரும்புகள் கொள்வனவு செய்ய வேண்டும். கிட்டத்தட்ட 600 கரும்புகள் தேவைப்படுகின்றன. இவ்வாறு எடுத்துக் கொண்டால் இலட்சக்கணக்கான கரும்புகளைத் தைப்பொங்கல் காலங்களில் மலையக பிரதேசத்திற்கு தேவைப்படுகின்றன.

அதிக குடும்பங்களுக்கு கரும்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருப்பதில்லை. பொருளாதார சிக்கலுக்கு மத்தியில் தைப்பொங்கல் கொண்டாடும். மக்கள் கரும்பினை பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலைக்கு மத்தியில் உழவர் திருநாளாம் தைப்பொங்கல் கொண்டாடுகின்றனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான நிலை ஏற்படாமல் பெருந்தோட்டப் பகுதியில் கைவிடப்பட்டுள்ள தரிசு நிலங்களில் கரும்பு பயிர் செய்கையை முன்னெடுப்பதற்கு.

அரசாங்க ஒரு திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான திட்டத்தை முன்னெடுக்கும் போது அதிகமானோருக்குத் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும். அத்தோடு கரும்பு ஏற்றுமதியும் மலையகத்திலிருந்து.செய்ய முடியும் எனவே இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதற்கு பல்வேறு தரப்பினரும் முன்வருவது காலத்தின் கட்டாயமாகும்.

# மூளைக் கட்டிகளை காண புதிய கருவி கண்டுபிடிப்பு

மூளையில் உள்ள கட்டிகளை அடையாளம் காணும் செயற்றிட்டம் (The Brain Tumour Navigation System Project) வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவன் வரதராஜன் டிலக்சன் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியின்(Mechatronic Engineering Technology) பிரிவின், இறுதி ஆண்டு மாணவராவார்.

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி போராட்டம்

இதில் பலர் கலந்து கொண்டு கையெழுத்துக்களை இட்டதுடன் குறித்த கையெழுத்து போராட்டமானது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

இதன் போது கருத்து தெரிவித்த இராவண சேனா அமைப்பின் தலைவர் கு.செந்துாரன், “அரசியல் கைதிகள் பல வருட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் விசாரணைகள் ஊடாக பலரும் விடுவிக்கப்பட்டு மீண்டும் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இவர்களை புதிய அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும். தமிழ் மக்களின் குரலை கேட்டு அரசாங்கம் செவிசாய்த்து உடனடியாக விடுதலை செய்ய கோரியே இந்த கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்” என்றார்.

**“ ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது**

ஐந்து ஆண்டுகள் தொடக்கம் முப்பது ஆண்டுகள் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை மற்றும் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை இந்த அரசாங்கம் சுதந்திர தினத்தன்றாவது விடுதலை செய்ய வேண்டும். யாழ். மண்ணில் வைத்து தேர்தலின் போது ஜனாதிபதி வாக்குறுதி அளித்தது போன்று பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர் ஆகியோர் இடத்தில் கேட்டு கொள்கிறோம்.

இந்த கோரிக்கை அடங்கிய மகஜர் சட்டமா அதிபர்,நீதியமைச்சர், ஜனாதிபதியிடமும் கையளிப்பு உள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

# கெலிஓயா மாணவி அம்பாறையில் மீட்பு

கண்டிக்கு புறப்படவிருந்த சொகுசு பேருந்தில் திங்கட்கிழமை (13) காலை இருந்த போது, கடத்திச் சென்ற நபரையும், குறித்த மாணவியையும் பொலிஸார் இனங்கண்டு மீட்டுள்ளனர்.

அம்பாறை பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இருவரும் ஞாயிற்றுக்கிழமை (12) இருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், இளைஞன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மாணவியிடம் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

தாயின் தம்பியான தனது மாமாவின் மகளையே இவ்வாறு அழைத்து வந்ததாகக் குறித்த மாணவியைக் கடத்திய இளைஞன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இரண்டு வருடங்களுக்கும் மேலாக ஜப்பானில் தான் பணி புரிந்ததாகவும், மாமாவிடம் தனது பணம் கொடுக்கப்பட்டதாகவும், பணத்தைத் தராததால் தான் இதுபோன்ற நடவடிக்கை எடுத்ததாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அவ்விளைஞன் கூறியுள்ளார்.

இதேவேளை, கடத்தப்பட்ட பாடசாலை மாணவி பரிசோதனைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# ஜனாதிபதி அனுரகுமார சீனாவுக்கு பயணமானார்

இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் சீன பிரதமர் லி கியாங்(Li Qiang) மற்றும் இராஜதந்திரிகளை சந்திக்கவுள்ளார்.

அத்தோடு, இந்த விஜயத்தின் போது, தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட துறைசார் பல கள விஜயங்களிலும் ஜனாதிபதி பங்கேற்க உள்ளதோடு பல உயர் மட்ட வர்த்தகக் கூட்டங்களிலும் பங்கேற்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இந்த விஜயம் மிக முக்கியமான முன்னெடுப்பாகக் கருதப்படுகிறது. இதன் ஊடாக இருதரப்பு பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மேற்கொள்ளும் இரண்டாவது வெளிநாட்டு உத்தியோகபூர்வவிஜயம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "வாழ்வாதாரத்தை அழிக்கும் செயல்"

**ஏ.எச்.ஹஸ்பர்**

பேருந்துகளுக்கு மேலதிகமாக பூட்டப்பட்டுள்ள அலங்கார பொருட்களை தடை செய்ய கோருவது வாழ்வாதாரத்தை அழிக்கும் செயல் என திருகோணமலை மாவட்ட தனியார் பேருந்து வரையறுக்கப்பட்ட சங்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை - குளக்கோட்டன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (13) இடம்பெற்ற குறித்த சங்கத்தின் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

மேலும், தனியார் பேருந்து வரையறுக்கப்பட்ட சங்கம் தெரிவித்துள்ளதாவது, ஆபத்தை ஏற்படுத்தும் என்றால் அந்த மேலதிக பொருட்களைத் தடை



செய்யலாம். பேருந்துகளால் நாளாந்தம் கிடைக்கும் வருமானத்தை விட வாடகைக்கு அமர்த்திப் பெறும் வருமானம் அதிகம் .வாகனத்தை வாடகைக்கு அமர்த்துபவர், ஆசனங்கள் மற்றும் பேருந்தின் உட்புற, வெளிப்புற அலங்காரத்தைப் பொறுத்தே முன்னுரிமைப்படுத்தி வாடகைக்கு அமர்த்துவார்கள்.

அதை விடுத்து, ஒன்றுமில்லாமல் மரண வீட்டிற்குச் செல்வது போன்று இருந்தால் யாரும் வாடகைக்கு பேருந்துகளை அமர்த்த மாட்டார்கள். வாகனத்தில் உள்ள வெள்ளிரும்பு, தொலைக்காட்சி, மின் குமிழ் போன்றன மக்களுக்குப் பாதிப்பு இல்லாமல் உள்ளதுடன், எமது தொழிலைச் செய்து கொண்டு செல்கிறோம்

இவ்வாறு, அரசாங்கம் மேலதிக பொருட்களை அகற்றச் சொல்வதானால் எமது வாழ்வாதாரமும் அழிக்கப்படுவதுடன், அலங்கார வெள்ளிரும்பு பொருட்களை விற்பனை செய்பவர்களின் வாழ்வாதாரமும் அளிக்கப்படுகிறது.இதனால் வருமானமிழப்பு ஏற்பட்டுள்ளது. வருமான இல்லாது போனால் அரசாங்கமே எமக்கு உழைத்துத் தரவேண்டும் என்று அச்சங்கத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு









நிதர்ஷன் வினோத்

சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவச கல்வி நிலையத்தின் மாணவர்களுக்கு யாழ். இந்தியத் துணைத் தூதுவராலயத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பொங்கல் திருநாளை முன்னிட்டு இந்திய மக்களின் பங்களிப்புடன் இவை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதை அடுத்து 73 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில், பிரதம விருந்தினராகப் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி , யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி , சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமார் , யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளான நாகராஜன், செல்வி ரம்யா , கலைமகள் இலவச கல்வி நிலைய உபதலைவர் அருள் சிவானந்தன், அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினர் , கலைமகள் சனசமூக நிலையத்தினர் ,சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பெற்றோர்கள் ,மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் தைப்பொங்கல் உதவி









**எஸ்.தில்லைநாதன்**

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, வவுனியாவில் உள்ள மூன்று அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த சிறார்களின் 130 குடும்பங்களுக்கு 325,000 ரூபாவில் தைப்பொங்கல் பொதிகளை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம், ஞாயிற்றுக்கிழமை (12) வழங்கி வைத்துள்ளது.


வவுனியா - கணேசபுரம் திருமூலர் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் 45 குடும்பங்களுக்கும், வவுனியா - கணேசபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் 42 குடும்பங்களுக்கும், வவுனியா - கோயில்புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களின் 43 குடும்பங்களுக்கும்,

ஒவ்வொரு பொதியும் 25,00 ரூபாய் பெறுமதியில் 130 குடும்பங்களுக்கும் 325,000 ரூபாய் பெறுமதியான தைப்பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆச்சிரம முதல்வர் அமுத கலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கசிப்பு பிடிக்க தோணியில் சென்று

# வாவியில் விழுந்த நான்கு பொலிஸார்




அம்பாறையில் சட்டவிரோதமாக நடத்தி வந்த கசிப்பு நிலையத்தை பிடிப்பதற்காக மீனவர் ஒருவருக்குச் சொந்தமான தோணியில் சென்ற நான்கு பொலிஸார் வாவிக்குள் விழுந்துள்ளனர்.

ஏரியைக் கடக்கத் தோணியில் சென்ற அம்பாறை பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட நான்கு அதிகாரிகளே இவ்வாறு வாவிக்குள் கவிழ்ந்து விழுந்துள்ளனர்.

இதன்போது, பொலிஸ் பொறுப்பதிகாரியின் வசமிருந்த ஒரு கைத்துப்பாக்கி மற்றும் 10 தோட்டாக்கள் கொண்ட ஒரு மேகசினும் ஏரியில் விழுந்துள்ளதாக கூறப்படுகின்றது.

கொனாடுவட்டுவன குளத்தின் மறுபுறத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் இயங்கி வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், அம்பாறை பொலிஸ் நிலையத்தின் ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உதயகுமார உட்பட நான்கு அதிகாரிகள் இந்த சோதனையை முன்னெடுத்துள்ளனர்.

மீனவர் ஒருவரின் படகில் அக்கரைக்கு பயணித்துக்கொண்டிருந்த போது, படகு கவிழ்ந்ததில், அந்த நால்வரும் வாவிக்குள் விழுந்துள்ளனர்.

இருப்பினும், துப்பாக்கி மற்றும் ரவைகளைக் கண்டுபிடிக்க அம்பாறை கடற்படைத் தளத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மோட்டார் சைக்கிள்களை திருடுபவர்

# உதிரிப்பாகங்களுடன் கைது

**ரஸீன் ரஸ்மின்**

மோட்டார் சைக்கிள்களைத் திருடி பாகங்களாகப் பிரித்து அதனை விற்பனை செய்யும் இடமொன்றைச் சுற்றிவளைத்த புத்தளம் தலைமையக பொலிஸார், பாகங்களாகப் பிரிக்கப்பட்ட சில மோட்டார் சைக்கிள்களின் உதிரிப்பாகங்களுடன் சந்தேக நபர் ஒருவரையும் ஞாயிற்றுக்கிழமை(12) கைது செய்துள்ளனர்.

குறித்த இடம் மரத் தளபாடங்கள் செய்யும் இடமாகப் பராமரித்து, அதில் ஒரு பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களைக் கழற்றி பாகங்களாகப் பிரித்து வைத்திருப்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

புத்தளம் மன்னார் வீதியின் 4ஆம் கட்டை பகுதியில் சனிக்கிழமை(11) இரவு இளைஞன் ஒருவரின் 4 இலட்சம் பெறுமதியான பல்சர் ரக மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது.

மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்ற சந்தேக நபர் சி.சி.ரி.வி. கெமராக்களின் உதவியுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபரைப் பிடித்து மேற்கொண்ட விசாரணையின் போது, திருடப்பட்ட குறித்த மோட்டார் சைக்கிள் சந்தேக நபர் வழங்கியதாகக் கூறப்படும் இடத்தை இளைஞர்கள் குழு சுற்றிவளைத்ததுடன் , புத்தளம் பொலிஸாரின் உதவியுடன் அங்குத் தேடிப்பார்த்த போது, திருடப்பட்ட பல்சர் ரக மோட்டார் சைக்கிள் அங்கு இருந்தமையும் கண்டுபிடித்துள்ளனர்.

புத்தளம் பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் அவ்விடத்தினுள் நுழைந்து சோதனையிட்ட போது, 11ஆம் திகதி இரவு திருடப்பட்டதாக தெரிவிக்கப்படும் குறித்த இளைஞரின் மோட்டார் சைக்கிள் ஏற்கனவே பல பாகங்களாக உடைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, அந்த இடத்தில் 10இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பாகங்களாக அகற்றப்பட்டுப் பிரிக்கப்பட்டு இருந்தமையும் தெரியவந்துள்ளது.

மேலும் சில மோட்டார் சைக்கிள்களின் இலக்கத் தகடுகளும் ஆங்காங்கே வீசப்பட்ட நிலையில் அந்த இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பல பாகங்களாக உடைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டதா அல்லது வேறு என்ன காரணங்களுக்காக இந்த இடத்தில் இவ்வாறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.







# முன்மாதிரியான பொங்கல் விழா

வலப்பனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட மந்திரிதென்ன, விடுதுகல சிங்கள பாடசாலையின் அதிபர் ஜமுனாகுமாரி தலைமையில், வியாழக்கிழமை (09) அன்று தைப்பொங்கல் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

முழு பாடசாலை சமூகமும் தமிழ் கலாசார ஆடைகள் அணிந்து தமிழ் கலாசாரத்துடன் தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடினர்.

ஒரு சிங்கள பாடசாலையில் தைப்பொங்கல் விழா இவ்வாறு மிகச் சிறப்பாக நடைபெற்றது ஒரு முன்மாதிரியான செயற்பாடாகக் கருதுவதாக அனைத்து கல்வி சமூகத்தினரும் பாராட்டுகின்றனர்.













# ‘தை’யுடன் சாமானியர்களுக்கு ‘வலி’யும் பிறந்திருக்கிறது

விவசாயிகள் சூரியனுக்கு நன்றி தெரிவித்து வருடாந்தம் கொண்டாடும் பாரம்பரிய பண்டிகையான தைப் பொங்கல் திருநாள் தமிழர்களால் இன்று செவ்வாய்க்கிழமை (14) அனுஷ்டிக்கப்படுகின்றது. அத்துடன், தமிழர்களின் தை மாதப் பிறப்பாகவும் இந்நாள் அமைந்திருப்பதோடு, சுப காரியங்களில் ஈடுபட ஆரம்பிக்கும் மாதமாகவும் அமைந்துள்ளது. தமிழர்களுக்கு இன்றுதான் புத்தாண்டு பிறந்திருக்கிறது..

‘தை’ பிறந்தால் ‘வழி’ பிறக்கும் என்று கூறுவார்கள். எனினும், எமது நாட்டில் தற்போதைய நிலைமையைப் பார்க்கும் போது, பலருக்கும் ‘வலி’யே பிறந்திருக்கிறது. எனினும், புதிய அரசாங்கம் சில செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது, விமர்சனங்களுக்கு செவிசாய்க்க வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், ஆட்சி பீடமேற்றிக் கடந்த இரண்டு மாதங்களுக்கு முக்கிய வேலைத்திட்டங்கள் எதையும் முன்னெடுக்கவில்லை.

எனினும், ‘தூய்மையான இலங்கை’ செயற்றிட்டத்தை முன்னெடுத்து, வாகனங்களில் மேலதிக பாகங்களை அகற்றும் செயற்பாட்டை அதிரடியாக முன்னெடுத்தமையால், பல்வேறான விமர்சனங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சமூக வலைத்தளங்களில் கேலி கிண்டல்கள் செய்யப்படுகிறது. சாரதி ஒருவர், தன்னுடைய முச்சக்கரவண்டியை ஆத்திரத்தில் தீயிட்டுக் கொளுத்தி விட்டார்.

‘தூய்மையான இலங்கை’ செயற்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். எனினும், ஒரு தொழிலுடன் இணைந்து தொழில் செய்பவர்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளில், இரு பக்கங்களும் பின்பக்கமும் ஸ்டிக்கர்களை ஒட்டுவதால் பாதிப்பு இல்லை. எனினும், முன்பக்க அலங்காரங்கள் தேவையில்லாத விபத்துக்களை ஏற்படுத்தும்.

தேவையில்லாத உதிரிப்பாகங்கள் என இனங்காணப்பட்ட உதிரிப்பாகங்கள் அப்புறப்படுத்தப்படும் போது, ஏனைய பாகங்களின் விலைகள் அதிகரிக்கும் இதனால், அந்த வாகனத்தின் உரிமையாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். உதிரிப்பாகங்களை விற்பனை செய்வோர் வர்த்தகமின்றி நடுவீதிக்கு இழுத்து வீசப்படுவார்கள் என்பதே உண்மையாகும்.

நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, தேங்காய்க்கும் அதே நிலை, பச்சை மிளகாய் ஒரு கிலோ கிராம் 2 ஆயிரம் ரூபாய்க்கும், புளி ஒரு கிலோ கிராம் 2 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன. அந்த பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் அதிரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக, மதுபானம் மற்றும் புகைப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அதற்காக எதிர்க் குரல் எழுப்ப முடியாது. எனினும், வாகனங்களின் விலைகள் பன்மடங்கு அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வாழ்க்கையில் சிறிய ரக வாகனத்தைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று கனவு கண்டவர்களின் கனவில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டனர். இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். ஆகையால், சாமான்ய மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

வழமையாக, தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை இம்முறையும் பலர் மத்தியில் காணப்பட்டாலும், தை பிறப்புடன் கூடவே வலி அதிகரித்துள்ளது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

விழித்திருக்கும் நிலையிலும் அநேகர் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். எதையும் ஆழமாகச் சிந்திப்பதில்லை. விடயம் புரியாமலேயே முடிவுகளை எடுக்கிறார்கள். சரி எது, பிழை எது எனத் தெரியாவிட்டால் அது உறக்க நிலைதான்.

விழிப்பு என்பது உயிரோட்டமானது; சிந்தனைகளை உருவாக்குவது; செயல்களைச் சரிவரச் செய்வதுமாகும். எதையாவது, எப்படியாவது செய்துமுடித்தால் சரி என எண்ணுபவர்கள், அதன் தாக்கங்கள் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

கருமங்களைச் செய்வதற்கு முன்னர், முழுமையாக யோசிப்பது நல்லது. கருமங்கள் யாவுமே எமக்கான கடமை எனப் பூரணமாக உணர்வீர்களாக!

அடுத்தவர்களுக்காகச் செய்யும் விடயங்களில், அதிக அக்கறையும் கூடுதல் கவனமும் தேவை. ஏனோ, தானோ எனச் செய்தல் ஆகாது.

காலம் பொன்னானது. கருமங்களில் அக்கறை இல்லாவிட்டால் அல்லது குறைந்தால், வரும் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும்.

ஒவ்வொரு வினாடியும், நேரத்தைத் திறம்படப் பயன்படுத்தி, உங்கள் முன்னேற்றங்களை நீங்களே உணர்வீர்களாக! சோம்பலினால் சோகங்கள்தான் மெல்ல மெல்ல உருவெடுக்கும். உணர்வீர்களா?

நன்றி–பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### சிவனொளியில் குரங்கு தொல்லை

நல்லத்தண்ணி-சிவனொளிபாதமலை வீதியில் குரங்குகள் அலைமோதுவதால், சிவனொளிபாதமலைக்கு வழிபட வரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு யாத்ரீகர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாத்ரீகர்களின் பொருட்கள், பொதிகள் போன்றவற்றைக் குரங்குகள் திருடிச் செல்வதால் இந்த சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன.

சிவனொளிபாதமலைக்கு யாத்திரைக்கு வந்து, தாங்கள் முகங்கொடுத்த நிலைமைகள் குறித்து கருத்து தெரிவித்த பலர், சில நாட்கள் தங்கியிருந்து உணவுகளைத் தயாரித்துக் கொண்டிருக்கும் போது, குரங்குகள் அவற்றை அபகரித்துக் கொண்டு, இல்லையேல் திருடிக்கொண்டு சென்று விடுகின்றன. ஆகையால், உணவுகளை மட்டுமன்றி, பெறுமதியான பொருட்களையும் இழந்துள்ளோம் என்றனர்.

எனவே, சிவனொளிபாதமலை பருவ காலத்தில் வரும் யாத்திரீர்கள், எவ்விதமான தொந்தரவுகளும் இன்றி, நிம்மதியாகச் சென்று வருவதற்கு வழிசமைக்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளனர்.

– சுதத்.எச்.எம்.ஹேரவா



முஸ்லிம் சமூகமும் எம்.பிக்களும்

# வாயைத் திறக்காதது ஏன்?

**மொஹமட் பாதுஷா**

தேசிய முக்கியத்துவமிக்க பொதுப்படையான பல விவகாரங்கள் பேசப்படுகின்ற காலத்தில் அது பற்றிய எந்தவிதமான நிலைப்பாட்டையும் முன்வைக்காமல், கடைசித் தருணத்தில் அது பற்றிப் பேச முனைகின்ற போக்கை குறிப்பாக முஸ்லிம் சமூக, அரசியல் பெருவெளிகளில் இன்றும் காண முடிகின்றது.

நாட்டில் பல விடயங்களில் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், அதைவிட அதிகமான விடயங்கள் இன்னும் மாறாமலேயே இருக்கின்றன. அதில் ஒன்றாக, முஸ்லிம் சிவில் சமூகம் மற்றும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளையும் வகைப்படுத்த முடியும்.

இப்போது மீண்டும் 13ஆவது திருத்த அமுலாக்கம் குறித்த அழுத்தங்கள் அரசாங்கத்தின் மீது பிரயோகிக்கப்படுகின்றன. வடக்கும், கிழக்கும் இணைந்த நிலப்பரப்பில் தமக்குரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தரப்பு தமது வழக்கமான கோரிக்கையை மீளப் புதுப்பித்திருக்கின்றது

இதற்கிடையில், எல்லாவற்றுக்கும் தீர்வாகப் புதிதாக இன்னுமொரு அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கான முஸ்தீபுகள் இடம்பெறுகின்றன. உள்ளூராட்சி தேர்தலையும் மாகாண சபை தேர்தலையும் நடத்திய பிறகு புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவது பற்றியே அரசாங்கம் சிந்திப்பதாகத் தெரிகின்றது.

இவ்விவகாரங்கள் பற்றி தமிழ், சிங்கள தரப்புக்கள் மட்டுமன்றி வெளிநாடுகள் சிலவும் அக்கறை கொண்டுள்ளன. அந்த அக்கறையை அடிக்கடி அறிக்கைகளாக, அறிவுரைகளாக, அழுத்தங்களாக வெளிப்படுத்துகின்றன.

இதுவெல்லாம் எப்போது கொண்டு வரப்படும் என்பது இன்னும் தெரியாது. ‘எப்போதோ நடக்கப் போகின்ற விடயத்திற்காக நாம் ஏன் இப்போது அறிக்கை விட வேண்டும்’ என்று யாரும் நினைப்பதில்லை. மாறாக, நிகழ்கால விவகாரங்களில் கவனம் செலுத்தி, அது பற்றிய தமது அபிப்பிராயத்தை ஒவ்வொரு தரப்பும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன.

இந்தப் பண்பு முஸ்லிம் அரசியலில் இல்லை. முஸ்லிம் மக்களிடமோ சிவில் செயற்பாட்டாளர்களிடமோ புத்திஜீவிகளிடமோ அல்லது மத அமைப்புக்களிடமோ கிடையாது.

கடைசி நேரத்தில் மிதிபலகையில் தொற்றிக்கொள்ள நினைக்கின்ற ஒரு பயணியைப் போல ஆயாசமாக ஓரத்தில் நிற்கின்ற ஒரு சமூகமாகவே முஸ்லிம்களை இவ்விவகாரத்தில் வகைப்படுத்த வேண்டியுள்ளது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தமானது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் கொண்டு வரப்பட்டதாகும். இதன் அடிப்படையிலேயே மாகாண சபை முறைமை உருவானது என்பதையும் நாமறிவோம். இப்போது மாகாண சபைகள் இருக்கின்றன. ஆனால், அங்கு ஆட்சிகள் இல்லை.

முன்னதாக மாகாண சபைகள் ஆட்சியிலிருந்த போது காணி, பொலிஸ் அதிகாரங்களை அரசாங்கங்கள் வழங்கியிருக்கவில்லை. இணைந்த வடகிழக்கு மாகாணத்தில் தமிழ் ஆயுதக் குழுக்களும் அதிகாரத் தரப்புக்களும் நடந்து கொண்ட விதம், இவ்விரு அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்கினால் ஏற்படச் சாத்தியமான பின்விளைவுகள் உள்ளிட்ட பல காரணங்களால் இவற்றை மாகாணங்களுக்கு அரசாங்கம் வழங்கவில்லை என்ற கருத்து உள்ளது.

இப்பேர்ப்பட்ட 13ஆவது திருத்தத்தை முழுவதுமாக அமுல்படுத்துமாறே தமிழ் அரசியல்வாதிகள் கோரி வருகின்றனர். இந்தியா இதற்கான அழுத்தத்தைக் கொடுத்து வருகின்றது. ஆனால் உண்மையில் இவ்வதிகாரங்களும், இனப் பிரச்சினை தீர்வும் தமிழர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று இந்தியா உளப் பூர்வமாகக் கருதுகின்றதா என்பது ஆய்வுக்குரியது.

எது எப்படியிருப்பினும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவது குறித்து முஸ்லிம் சமூகம் காத்திரமான நிலைப்பாட்டைச் சரிவர முன்வைக்கவில்லை.

அதிகாரப் பகிர்வோ அல்லது 13 இன் அதிகாரங்களோ பகிரப்படுவது அவ்வளவு இலகுவில் நடந்து விடக் கூடிய காரியமல்ல. யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்கள் எல்லோருமே அந்த ஆளும் கட்சிக்கு வாக்களித்தாலும், சிங்கள மக்களின் விருப்பத்தை மீறி, அது அவ்வளவு எளிதில் நடந்து விடாது என்பதே யதார்த்தமாகும்.

ஆயினும் கூட, அது பற்றிய தமது நிலைப்பாட்டை முஸ்லிம் சமூகம் தொடர்ச்சியாக முன்வைக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுகுக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அது முஸ்லிம்களுக்கு இப்போது இருக்கின்ற சூழலில் எவ்விதமான சாதக, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என்று சொல்வது பொறுப்பு வாய்ந்தவர்களின் கடமையாகும்.

காணி அதிகாரம் வழங்கப்பட்டால் அது வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் இன விகிதாசாரத்தின் அடிப்படையில், பிரித்தொதுக்கப்பட வேண்டும். அதேபோல, பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் அது அங்கீகரிக்கப்பட்ட ஆயுத தரப்பின் மேலாதிக்கத்தை உண்டுபண்ணும் என்பதையும் கடந்தகால அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டு, கருத்துரைக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பது பற்றி தமிழ் கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. இணைந்த வடகிழக்கைப் பிரிக்க வேண்டும் என்று நிலைப்பாட்டிலேயே ஜே.வி.பி. எப்போதும் இருந்து வந்தது.

அதுமட்டுமன்றி, ஜே.வி.பியின் செயற்பாட்டாளர்களின் மூலமாகவே இதனை இரு மாகாணங்களாகப் பிரிப்பதற்கான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, உயர்நீதிமன்ற தீர்ப்பின் படி, 2008ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டன.

ஆகவே, அதே ஜே.வி.பி. ஆட்சியில் இருக்கும் வரைக்கும் வடக்கும், கிழக்கும் மீள் இணைக்கப்படுவது எவ்வகையிலும் சாத்தியப்படாது.

குறிப்பாக வடக்கில் என்.பி.பிக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குகள் அரசாங்கத்தின் சில நிலைப்பாடுகளை நியாயப்படுத்தத் துணையாக அமையும்.

எது எவ்வாறிருப்பினும், வடக்கும் கிழக்கும் மீள இணைக்கப்படுவதை முஸ்லிம்கள் ஒரு துளி அளவேனும் விரும்பவில்லை என்பதைச் சொல்ல வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதற்கு ஆயிரத்தெட்டுக் காரணங்கள் இருக்கின்றன.

இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்கள் பெற்ற அனுபவங்களும் பிரிந்த பிறகு இரு சமூகங்களும் பெற்ற அனுகூலங்களும் முக்கியமானவை. அது மட்டுமன்றி வடக்கும், கிழக்கும் எக்காரணத்திற்காகவும் இணைக்கப்பட்டு, அதில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக்கப்பட்டு, நசுக்கப்படுவதை முற்றாக முஸ்லிம் சமூகம் எதிர்க்கின்றது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் முஸ்லிம்களின் முதுகில் எழுதப்பட்ட அடிமைச் சாசனம் என்று மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் மற்றும் சேகு இஸ்ஸதீன் ஆகியோர் கூறினர். பிற்காலத்தில் அதாவுல்லா போன்ற தலைவர்களும் இந்த நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர்.

ஆயினும், பிரதான முஸ்லிம் கட்சித் தலைவர்களான றவூப் ஹக்கீம், மு.காவின் ஸ்தாபக தலைவர் எடுத்த நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தவில்லை. கழுவுகிற மீனில் நழுவுகின்ற போக்கை அவர் கொண்டிருந்தார், கொண்டிருக்கின்றார். றிசாட் பதியுதீனும் ஒரு திடமான நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை என்பது முக்கியமானது

இவர்கள் மட்டுமன்றி, கடந்த காலங்களில் பதவி வகித்த முஸ்லிம் எம்.பிக்களும் இந்த மெத்தனப் போக்கையே கடைப்பிடித்தனர். இப்போது புதிதாக முஸ்லிம் கட்சிகள் ஊடாகவும், என்.பி.பி.ஊடாகவும் எம்.பியாகி உள்ளவர்களும் இவ்விவகாரத்தில் மௌனிகளாக இருக்க முனையக் கூடாது.

அதேபோன்று, புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவது பற்றி அனுரகுமார அரசாங்கமும் பேசத் தொடங்கியுள்ளது. இனப் பிரச்சினை, 13ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை உள்ளிட்ட பல சிக்கல்களுக்கான யாப்பு ஏற்பாடுகளைத் தாம் விரும்பியவாறு கொண்டு வர ஆட்சியாளர்கள் நினைப்பார்கள் என்பதுதான் உண்மையாகும்.

எவ்வாறிருப்பினும், இந்த விடயத்தில் தமிழ் கட்சிகள், தமிழ் சிவில் சமூகம் எப்போதும் விழிப்பாக இருந்து அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. இந்த நிலைமை முஸ்லிம் சமூகத்தில் ஏன் இல்லை என்பதுதான் கேள்வி.

உத்தேச அரசியலமைப்பை உருவாக்கும் போது, அதில் முஸ்லிம்களின் உரிமைகள், அபிலாஷைகள், இன, மத விடயதானங்களுடன் தொடர்புபட்ட ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்படுவதற்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் இணைந்து செயற்பட வேண்டியுள்ளது.

இதற்கான தலைமைப் பொறுப்பை முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் எம்.பிக்கள் எடுக்க வேண்டும். என்.பி.பி. போன்ற பெரும்பான்மைக் கட்சிகளின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினர்களாக சென்றுள்ளவர்கள் தங்கள் சமூகத்தின் நலனை உறுதிப்படுத்துவதற்காகக் கணிசமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

ஜம்மியத்துல் உலமா சபை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம் போன்றனவும் இதில் ஒரு முக்கி வகிபாகத்தை எடுக்க வேண்டும். முஸ்லிம் சிவில் செயற்பாட்டாளர்கள், சமூக சேவகர்கள் புத்திஜீவிகள் என பலதரப்பட்ட பிரிவினரும் தமது சமூகத்தின் விவகாரங்களுக்காக இப்போதே வாயைத் திறக்கவில்லை என்றால், கைசேதம்தான் நிச்சயமானதாக இருக்கும்.

பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

# புலர்ந்தது 'தை'



ஆங்கிலப் புத்தாண்டு பிறந்து அதற்கான வாழ்த்துகளை நாம் பரிமாறிக் கொண்டதனைத் தொடர்ந்து வருகின்றது தைத்திங்கள் முதல் நாளாகிய பொங்கல் திருநாள்.

## பொங்கல் தினம்

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது ஆன்றோர் வாக்கு. தை மாதம் என்றாலே 'ராமப் பஜனை' ஊர்வலங்களையும், கீர்த்தனைகளையும், எங்கும் கேட்கலாம்.

எனது பால்ய பருவத்தில், ஒவ்வொரு வருடமும் வரும் தை மாதத்தில் அதிகாலையிலேயே எழுந்து, கடுங் குளிரிலும் கூட, கிணற்று நீரில் குளித்து விட்டு பஜனையுடன் வரும் அடியார்களுடன் சேர்ந்து கீர்த்தனைகள், தேவாரங்கள் பாடிக்கொண்டு ஊரில் செல்வதுவும், பின்னர் ஆலயப் பூஜை முடிந்த பின்னர், பாடசாலைக்கு சென்ற அனுபவங்கள் நெஞ்சை விட்டு அகலாதவை.

அந்த அதிகாலையிலும் எமது ஊரிலுள்ள மக்கள் பஜனையில் வரும் அடியார்களுக்கு சூடான தேநீருடன், சிற்றுண்டிகளும் வழங்கியதனை எண்ணிப் பார்க்கும் பொழுது அக்காலம் மீளவும் வராதா என்ற ஏக்கம்.

அக்காலங்களில் எங்களது ஊரில் இளம் பெண்கள் அதிகாலையில் எழுந்து கோலமிடுவதும், பஜனையில் வரும் கம்பத்தினை வழிபடுவதுவும் சிறப்பம்சம்.

பொங்கல் விழாவின் போது கோலப் போட்டிகள் விமரிசையாக நடாத்தப்படும். வித விதமான கோலங்கள் கண் கொள்ளாக் காட்சியாக, மனதில் ஒரு குதூகலத்தை ஏற்படுத்தும்.

வெற்றியாளர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுவர். அரிசி மாவிலான கோலமிடுவதன் மூலமாக, அனைத்து உயிரினங்களுக்கும் உணவளித்தவர்கள் எம் வழிகாட்டிகள்.

மாவினால் கோலமிடும் போது எறும்பு முதலான ஊர்வனவைகளும், குருவிகளும், தமக்கான உணவாக அதனைச் சாப்பிடும். "ஓரறிவுள்ள உயிர்கள் தொடக்கம் ஆறறிவுள்ள உயிர்கள் வரை வயிறார உண்ண வேண்டுமென்பதே" அதன் தத்துவமாகும்.

பொங்கல் தினத்தன்று ஶ்ரீ ராமபிரானுக்குத் திருவிழா நடைபெறுவதுடன், எமது ஊரிலுள்ள வீதிகள் முழுக்க வாழை மரங்களாலும், கரும்பு மற்றும் மாவிலைத் தோரணங்களாலும், அலங்கரிக்கப்பட்டிருந்த காட்சிகள் அந்த நாட்களில் கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்பட்டது. எங்கும் பக்தி பரவசமூட்டும் தெய்வீகப் பாடல்களும், ஊர் தோறும் ஒலி பரப்பப்பட்டது.

இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் முன்னின்றவர்கள் எமது மூதாதையர்கள். நிலம், நீர், வானம் ஆகியன இயற்கை சக்திகளின் துணை. இவை இல்லாவிட்டால் உழவனால் உழவுத் தொழில் செய்ய முடியாது. மனிதனுக்குத் தேவையான உணவைத் தருவது என்பது இயலாத காரியம். எனவே, இயற்கை சக்திகளுக்குத் தலை வணங்கி நன்றி செலுத்தும் ஒரு நல்ல நாளாகப் பொங்கல் திருநாள் அமைகின்றது.

சூரியனே இந்த உலகின் ஒளிப் பிரவாகத்தை ஏற்படுத்துபவன். உலகின் அடிப்படை இயக்கத்துக்குச் சக்தியாக இருப்பது சூரியன் என்பதனை தெளிவாக உணர்ந்திருந்தவன் தமிழன். எனவே சூரியனை வணங்குதல் மிகவும் பொருத்தப்பாடு உடையதெனக் கைகூப்பி வணங்கிக் கொண்டாடும் இயற்கை திருநாள் இந்த பொங்கல் திருநாள்.

அந்த சக்தியின் பெருமையைப் பறைசாற்றும் அதேவேளை, உழவர்களை முன்னிலைப்படுத்துவது பொங்கல் தினம்.

பழைய பகைமையை, குரோதங்களை தம் மனதிலிருந்து களைந்து விட வேண்டும் என்று போதிக்கும் போகிப் பண்டிகை. உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளும் வாழப் பிறந்தவை. அவைகளை மனிதன் நேசிக்கப் பழகிக்கொள்ள வேண்டுமென எடுத்தியம்புகின்ற மாட்டுப் பொங்கல்.

ஒவ்வொரு மனிதனது வாழ்க்கையிலும் உறவுகள் முக்கியமானவை. அந்த உறவுகளின் பெருமையை வலியுறுத்துவதற்காகக் கொண்டாடப்படும் காணும் பொங்கல்.

திருமணமான முதல் வருடம் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு சீர்வரிசை கொண்டு செல்வது அன்று தொட்டு இன்று வரை தொடர்ச்சியாகத் தொய்வின்றி நடந்து வரும் ஒரு நிகழ்வு. இவ்வாறான நிகழ்வின் மூலமாகப் பிறந்த வீட்டுக்கும், புகுந்த வீட்டுக்கும் இடையிலான பிணைப்பினை வலுப்படுத்தினர் எம் முன்னோர்கள்.

வாழைப்பழம், வாழை இலைகள் ஆகியவற்றுக்குக் கூட முக்கியத்துவம் இத்தினத்தன்று வழங்கப்படுகின்றது. "வாழையடி வாழையாக வாழ வேண்டும்" என வாழ்த்தும் மரபு எமது உணர்வோடு கலந்து காணப்படுவதே இதனது தாற்பரியம்.

பொங்கல் தினத்தன்று பொங்கல் பானையினை மஞ்சள் தண்டுகளாலும், இஞ்சிக் கொத்துக்களாலும் அலங்கரித்து, அப்பானையின் கழுத்தில் அவற்றைக் கட்டி, பானையைச் சுற்றி திருநீறு, சந்தனம், குங்குமம் வைத்து அலங்கரித்து, பானையில் பொங்கலுக்கான பச்சரிசியினை எனது தாத்தா சேர்ப்பதுவும், தொடர்ந்து எமது குடும்ப மூத்த உறுப்பினர்கள் பொங்கலுக்குத் தேவையான ஏனைய பொருட்களையும் சேர்த்த காட்சி இன்றும் என் மனக்கண் முன் அசை போடுகின்றது.

கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த அந்த காலகட்டங்களில் குடும்ப உறவுகள் சேர்ந்து மகிழ்வாகக் கொண்டாடிய தருணம் இன்றும் பசு மரத்தாணிப் போல என் மனதில்.

இவ்வாறு ஒரு அர்த்த புஷ்டி நிறைந்த பண்டிகையாகத் திகழ்கின்றது இந்த பொங்கல் பண்டிகை.

தென்னாசிய மக்களின் ஜீவனோபாய தொழில் விவசாயம், உழவர்களினால் காலாகாலமாக கொண்டாடப்படும் உன்னதமான விழா பொங்கல் விழா. இவ்வுலகமே நம்பியிருக்கும் ஒரே ஜீவன் விவசாயி, அதனால் தான்

"உழவன் இன்றேல் இவ்வுலகம் இல்லை" என முன்னோர்கள் கூறி வைத்தனர்.

உழவுத் தொழில் மனிதனின் உயிரோடு கலந்த ஒன்று. மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவைத் தருகின்ற உயர்ந்த தொழிலான உழவுத் தொழில் இல்லாவிட்டால் இந்த உலகமே செயலற்று போய்விடும். அதனால் தான் உழவின் பெருமையைக் கூற வந்த திருவள்ளுவரும்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்" என்றும் "சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" என்றும் கூறி உழவுத் தொழிலே உலகில் சிறந்த தொழில். மற்ற தொழில்கள் எல்லாம் அதற்குப் பின்னர் வைத்து எண்ணத்தக்கத் தொழிலாகும் என்று உயர்வாகக் கூறுவதோடு, தனது குறளில் உழவுத் தொழிலுக்கும், நன்றி உணர்விற்கும், முக்கியத்துவம் கொடுத்து அவர் இயற்றிய குறட்பாக்கள் பத்து.

உலகிலேயே உழவர்களுக்காகக் கொண்டாடப்படும் ஒரு தினம் இத்தினம்.

உழவனின் உழைப்பினால் உருவாகும் கழனி விளைச்சலை நினைவு கூர்ந்து, நாம் வாழும் பூமியைப் பொன் விளையும் பூமியாக மாற்றுகின்ற உழவர்களுக்காகக் கொண்டாடப்படுகின்ற இன்பத் திருநாள் இந்த தைத் திருநாள்.

உலகில் இருக்கும் அனைத்து மக்களும் கொண்டாட வேண்டிய இந்த திருநாளைத் தமிழர் மாத்திரம் தொன்று தொட்டுக் கொண்டாடி வருவது சிறப்பான அம்சமாகும். ஆரம்பகால மனிதர்கள் இயற்கையுடன் ஒன்றித்து வாழ்ந்து வந்துள்ளனர் .

சிந்துவெளி நாகரிகம், மொகஞ்சதாரோ ஹரப்பா நாகரிகக் காலகட்டங்களில் இவற்றைச் சிறப்பாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இந்த நாகரிகங்கள் தமிழர் பண்பாட்டுடன் மிகவும் நெருக்கமான தொடர்பு கொண்டவையாக இருப்பதனை நோக்கலாம்.

ஒரு சமூகத்தின் பண்பாடு, கலை, கலாசாரம், மொழி என்பன பாதுகாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. அவைகளே, ஓர் இனத்தின் அசைக்க முடியாத சொத்துக்களும், அடையாளங்களும், நமது பண்பாட்டில், மரபில், வாழ்க்கை முறையில் ஆழ வேரூன்றிய ஒரு விழா பொங்கல் விழா. அந்த வகையில், நாம் எமது பண்பாட்டு அம்சங்களைத் தொடர்ச்சியாகப் பராமரித்து வருவது போற்றப்படக் கூடிய விடயம். பொங்கல் பண்டிகை மனிதனுக்கும், இயற்கைக்கும், அவனோடு சார்ந்து வாழும் உயிரினங்களுக்கும் இடையிலான தொடர்பினை உணர்த்துமோர் தினம்.

சங்ககால நூல்கள் பலவும் தைத்திருநாளை சிறப்பாக எடுத்தியம்பியிருக்கின்றன

'தைஇத் திங்கள் தண்கயம் படியும்' என்கின்றது நற்றிணை.

'தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' என்கின்றது குறுந்தொகை.

'தைஇத் திங்கள் தண்கயம் போல்' என்கின்றது புறநானூறு.

'தைஇத் திங்கள் தண்கயம் போது' என்கின்றது ஐங்குறுநூறு.

'தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ' என்கின்றது கலித்தொகை.

என பலவாறாக தைத்திருநாளின் சிறப்பியல்புகளைப் பழந்தமிழர் இலக்கியங்கள் தெளிவுபடுத்தியுள்ளன. எமது மூதாதையர்கள் எவ்வளவு சிறப்பாக இவ்விழாவைக் கொண்டாடியிருந்தனர் என்பதற்குச் சங்க கால இலக்கியங்களே சான்றுகள்.

புறநானூற்றுப் பதிகத்தில் 'சாத்தனார்' என்னும் புலவர் பொங்கலானது எவ்வாறு சமைக்கப்படுகின்றது என்பதனை தெளிவாகக் கூறியுள்ளார். இப்பண்டிகையின் பொழுது அரிசியும், பாலும் சேர்க்கப்பட்டுப் பொங்கப்படும் ஒரு விழாவென அழகாகக் குறிப்பிடுகின்றார்.

## என்ன ஆச்சரியம்?

இரண்டாயிரம் வருடங்களாக இந்த உணவு செய்முறையில் இன்று வரை எத்தகைய மாற்றமுமில்லாமல் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றது. எமது அடிப்படை உணவான அரிசியினை எமக்கு உருவாக்கித் தருபவர்கள் உழவர்கள்.

"உழவர், சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்' என்பதனை அனைவரும் அறிவர். இதுபோல, உழவுத் தொழிலில் பயன்படுத்தப்படுகின்ற மாடுகள் போன்ற விலங்குகளுக்கும் நன்றி செலுத்துவது தவிர்க்க முடியாதது. அது நமது நன்றிக் கடன். அதுவும் செய்நன்றிக் கடன். மனித பிறப்போடு சேர்ந்து வருவது தான் நன்றியுணர்வு.

நன்றி கூறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட தினம் தான் தை மாதத்தில் வரும் முதலாம் நாள். இந்த நன்றி உணர்வானது இற்றை வரை மனித குலத்தில் வேரூன்றி நிற்பதனை நாம் அவதானிக்க முடியும்.

மனிதனுக்குத் தேவையான உணவினை உற்பத்தி செய்வதற்காக, எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், வெயில் மழையென பாராது, அல்லும் பகலும் உழைக்கும் கால்நடை இனங்களும், பிற உயிரினங்களும் போற்றப்படத் தக்கவை.

வயலில் உழும் உழவன் நெல்லை எடுத்துக் கொள்கின்றான். அவனுக்குத் தேவைப்படாத வைக்கோலை மாடு எடுத்துக் கொள்கின்றது. நெல்லிலிருந்து உழவன் அரிசியை எடுத்துக் கொள்கின்றான். அவனுக்குத் தேவையில்லாத தவிட்டை மாடு எடுத்துக் கொள்கின்றது. நீரில் அரிசியைக் கழுவி எடுத்துக் கொள்கின்றான் உழவன். அந்த கழுவிய நீரைக் குடிக்கின்றது மாடு. வாழை இலையில் உணவு அருந்துவது உழவனின் பழக்கம். அந்த இலையை உண்டு மகிழ்வது மாட்டின் பழக்கம். இவ்வாறு மனிதனும், விலங்கும் ஒன்றிலொன்று தங்கி இருப்பது மாத்திரமல்லாது, அவன் சாப்பிட்டது போக மீதம் உள்ளதை மாடுகள் உண்டு மகிழ்கின்றன என்பது தான் உண்மை.

பொங்கல் தினத்தன்று, விருந்தோம்புவதிலும் கூட எம்மவர்கள் சளைத்தவர்கள் அல்லர். பொங்கல் பொங்காதவர்களுக்கும் பகிர்ந்து உண்ணும் பழக்கத்தினையும் அவர்கள் கொண்டிருந்தனர். பொங்கல் விழா நான்கு தினங்கள் கொண்டாட்டப்படுகிறது.

## போகிப் பண்டிகை

'பழையன கழித்து, புதியன புகவிடும்' நாளாகப் பொங்கலின் முதலாவது நாள் கருதப்படுகிறது. அதாவது வீட்டில் இருக்கின்ற பழைய மற்றும் தேவையில்லாத பொருட்களை நீக்கி விட்டு , புதியவைகளைக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கமே இதனது அடிப்படையாகும். 'இந்திர விழா' என்ற பெயரில் நல்ல மழை பொழியவும், நாடு செழிக்கவும் இந்திரனை ஆயர்கள் போகிப் பண்டிகை தினத்தன்று வழிபட்டு வந்தனர்.

## சூரியப் பொங்கல்:

"அவன் இன்றி அணுவும் அசையாது" என்பது போல, சூரிய வெளிச்சமின்றி இந்த உலகம் இயங்காது. உலக மக்களுக்கு, அவர்களது வாழ்வாதாரத்துக்குத் தேவையான அனைத்து வசதிகளையும், இலவசமாக அளிக்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இந்த நாள் காணப்படுகின்றது.

உழவன் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்த புதுப் பானை வைத்து, புத்தரிசி உலையில் இட்டுப் பாலோடு பொங்கி வரும் வேளையில் 'பொங்கலோ பொங்கல்', என கூவி உலகுக்குத் தனது மகிழ்ச்சியினை வெளிப்படுத்துகின்றான். புது அரிசியைப் பொங்கலாக்கி அதனை ஆதவனுக்குப் படைத்து மகிழ்ச்சி அடையும் உன்னத திருநாள் இதுவாகும்.

## மாட்டுப் பொங்கல்:

இதற்கு அடுத்த தினம் மாட்டுப் பொங்கல் தினமாகும். மனிதனது வாழ்க்கையில் ஆடு, மாடுகள் உள்ளிட்ட பல்வேறு விலங்கினங்களின் பங்களிப்பு முதன்மையானது. மனிதனுக்குத் தேவையான பாலை கொடுப்பது மாத்திரம் அல்லாது, வயல் உழுவதற்கும், போக்குவரத்திற்கும், உரப் பாவனைக்கும், இவை பெரிதும் உதவுகின்றன. இவற்றின் சேவைகளுக்கு நன்றி கூறும் முகமாக இத்தினம் கொண்டாடப்படுகிறது .அத்துடன் பசுக்களைத் தெய்வமாக வழிபட்டவர்கள் நம் முன்னோர்கள் .

பசுக்களில் அனைத்து தேவர்களும் இருப்பதாகக் கருதப்படுவதனால் அவைகளுக்கான தினமாக இது உள்ளது. மாட்டுப் பொங்கல் அன்று அதனைக் குளிப்பாட்டிப் பொட்டிட்டு, மாலையிட்டு, அதனை அலங்கரித்து அதற்கென பொங்கல் வைத்து வணங்கிப் படைத்துக் கொண்டாடும் திருநாள் மாட்டுப் பொங்கல்.

## காணும் பொங்கல்

இறுதி நாள் கொண்டாட்டமாக 'காணும் பொங்கல்' காணப்படுகின்றது.

அன்றைய தினம் உற்றார், உறவினர், நண்பர்களைச் சந்தித்தல், பெரியோர்களது ஆசி பெறுதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும். இந்தியாவின் பிற பகுதிகளில் சூரிய வழிபாடு 'மகர சங்கராந்தி' என்ற பெயரில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இந்தியக் கலாசாரத்தின் தாக்கம் கொண்ட, இந்தோனேசியா, தாய்லாந்து, லாவோஸ், நேபாளம், மியான்மார் போன்ற ஆசிய நாடுகளிலும் மகர சங்கராந்தி விழா வெவ்வேறு பெயர்களால் கொண்டாடப்படுகிறது.

பஞ்சாப், ஹிமாச்சல் பிரதேசம், ஹரியானா, ஜம்மு ஆகிய மாநிலங்களில் சூரிய வழிபாடு 'லோரி' என்ற பெயரில் கொண்டாடப்படுகின்றது. அசாம் மாநிலத்தில் 'மாக் பிகு' என்ற பெயரிலும், குஜராத்தில் 'உத்தராயன்' என்ற பெயரிலும் கொண்டாடப்படுகின்றது.

உலகில் பரவலாக வாழும் தமிழர்கள் இந்த பண்டிகையினைக் கொண்டாடுவதன் மூலம், அவர்கள் இத்தினத்தின் பாரம்பரியப் பெருமையினை உலக மக்களும் அறிந்து கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர் எனலாம். இதன் மார்க்கமாக எமது கலை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களை தாங்கள் குடிபெயர்ந்த நாடுகளுக்குப் பரப்பும் இணைப்புப் பாலமாகவும் எம்மவர்கள் திகழ்கின்றனர் என்பது பெருமைக்குரிய விடயம்.

தமிழர்கள் பிறக்கும் தை மாதத்தில் நல்ல பலன் தரக்கூடிய நற்காரியங்களைத் தொடங்குவர். இயற்கையோடு இணைந்து வாழுகின்ற பொழுது எமது உடல் நலம் மேம்படும். எமது இதயங்களில் நல்ல பண்புகளும், கருணையும் பெருக்கெடுத்து ஓடும்.

இந்த இனிய திருநாளில் தங்களுக்கும், தங்களது குடும்பத்தாருக்கும், சுற்றத்தார்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றேன்.



குடும்ப உறவுக்கு உரமிடும்

# தமிழர் திருநாள் தைப்பொங்கல்











வித்தகர் விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா

தை மாதப் பிறப்பை வரவேற்கும் முகமாகவும் விவசாயத்துக்கு உதவிய சூரியன் விவசாயிகள் மற்றும் கால்நடைகளுக்கு நன்றி கூறும் முகமாகவும் தைப்பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

குடும்பத்துடன் ஒற்றுமையாகக் கொண்டாடும் ஒரு பண்டிகையாகத் தைப்பொங்கல் பண்டிகை திகழ்கிறது.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை (14) தமிழர் வாழும் பட்டிதொட்டி எல்லாம் நடைபெறுகிறது .

இது ஓர் அறுவடைப் பண்டிகை ஆகும். இந்த விழா தென்னிந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, மொரிசியசு என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

உலகமே உணவை நம்பி இருக்கிறது. அதற்கு அடிப்படை விவசாயம் ஆகும். விவசாயத்துக்கு முக்கியமாக விவசாயி தேவை. இரண்டுக்கும் முக்கியமானவன் சூரியன். அந்த சூரியனை நன்றியோடு நினைந்து வழிபடுகின்ற இயற்கை திருவிழா.

உழவு இல்லையேல் உலகில்லை. வள்ளுவரும் அதை அழகாகக் கூறியிருக்கின்றார்.

இயற்கையைத் தெய்வமாக வழிபட்டு வந்த முன்னோர்களின் பாரம்பரியம் தற்போது 2025 பொங்கல் பண்டிகை வரை வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. விவசாயத்திற்கு ஆதாரமான சூரியன், மழைக்கு அதிபதியான இந்திர தேவன் மற்றும் விவசாயத்திற்கு உதவி செய்யும் கால்நடைகள் ஆகிய அனைத்திற்கும் நன்றி செலுத்தி வழிபடுவது வழக்கம்.

பொங்கல் பண்டிகை, தைத் திருநாள் கொண்டிருக்கும் ஆன்மீக ரீதியாக முக்கியத்துவம் இதேபோல, ஒரு பக்கம் வாழ்க்கை முறையோடு இணைந்திருக்கும் இயற்கைக்கு நன்றி செலுத்தும் ஒரு மிகப்பெரிய பண்டிகையாகப் பொங்கல் பண்டிகை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது.

பொங்கல், உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகக் கொண்டாடப்படுகிறது. இந்தப் பண்டிகை இந்து கடவுளான சூரிய தேவனுக்கும் இயற்கைக்கும் அர்ப்பணிக்கப்பட்டது.

'தை பிறந்தால் வழி பிறக்கும் ' என்பது பன்னெடுங்காலமாக நம் நாட்டில்

வழக்கத்தில் உள்ள பழமொழியும் பொன்மொழியுமாகும். கிராமத்தில் இன்றளவும் தைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பார்கள். எதுவாக இருந்தாலும் தை பிறக்கட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்பார்கள்.



கல்யாணம் பேச தை வரட்டும். ஜாதகம் பார்க்கலாம் என்று சொல்வார்கள்.

கொடுக்க வேண்டிய காசுக்கும் வரவேண்டிய பணத்துக்கும் தை மாதத்தை

எதிர்பார்ப்பார்கள். ஏனென்றால் தையில்தான் அறுவடை முடிந்து கையில் காசு பணம் புரளும். சுப விசேஷங்களுக்கு தை மாதம் மிகவும் சிறந்தது. கல்யாணம் நிச்சயதார்த்தம் வளைகாப்பு கிரகப்பிரவேசம் என எல்லா சுப நிகழ்ச்சிகளுக்கும் இந்த மாதத்தில் குறைவிருக்காது.

புத்தாண்டு அல்லது புது வருடம் என்பது புதிய நாட்காட்டி வருடம்

தொடங்குவதைக் குறிக்கும். ஆனால், பெரும்பான்மையான கலாசாரங்களில் புது வருடத் தொடக்கம் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் தற்காலத்தில் உபயோகித்து வரும் கிரெகொரியின் (Gregorian calendar) நாட்காட்டியின்படிபுது வருடமானது ஜனவரி மாதம் முதல் திகதி தொடங்குகிறது. ஆனால், தமிழுக்கு புதிய வருடம் தை ஒன்றில் பிறக்கிறது. அது இன்று ஆகும்.

ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம் ஆகும். அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியைச் சர்க்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப் பானையில் இட்டு புத்தடுப்பில் கொதிக்க வைத்துப் பொங்கல் பொங்கி சூரியனுக்கும் மாட்டுக்கும் படைத்து உண்டு மகிழும் விழாவே பொங்கல் விழாவாகும்.

## பொங்கல் நேரம்

இந்த வருடத்தில் பொங்கலிடுகின்ற நேரமாகக் காலை 5 மணி முதல் 6.40 மணி வரையாகும். தவறினால் 7:30 மணி முதல் எட்டு முப்பது மணி வரை அதுவும் தவறினால் 10:30 முதல் 12 30 வரை பொங்கல் இட்டுப் படைக்கலாம்.

பொங்கல் பொங்கி வழியும் நேரம் "பொங்கலோ பொங்கல்.." என்று கூறி சங்கு நாதம் எழுப்பி வழிபடுதல் வேண்டும்.

## பொங்கலை எவ்வாறு கொண்டாடுகிறோம்?

அன்று அதிகாலையில் எழுந்து நீராடி புத்தாடை அணிந்து விபூதி தரித்து திலகமிட்டு புதுப் பானையை அலங்கரித்து மஞ்சள் இஞ்சி கட்டி சாமி அறையில் வைத்து வழிபட்டு பின்னர் அடுப்பில் ஏற்ற வேண்டும்.உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் வரவழைத்து விளையாட்டுகள் வைத்து அன்று மிக மிக மகிழ்வான தருணங்களாக இருக்கும்.

குறிப்பாகக் கபடி,வழுக்கு மரம்,பானை உடைத்தல் போன்ற விளையாட்டுகளை விளையாடுவார்கள்.

## பொங்கல் வகைகள்

தமிழர்களின் திருநாளாம் பொங்கல் பண்டிகை நான்கு நாட்கள் கொண்டாடப்படும் .

1. போகிப் பொங்கல்
2. தைப்பொங்கல்
3. மாட்டுப்பொங்கல்
4. காணும் பொங்கல்

## போகிப் பொங்கல்

நம் வீட்டில் உள்ள பழையவற்றைப் போகி, வீட்டைத் தூய்மைப் படுத்துவதே போகிப் பண்டிகை என்பார்கள் பொதுவாக. உண்மையில் எமது அகத்தில் மனதில் இருக்கும் கெட்ட தீய எண்ணங்களை அகற்றுவது இதன் நோக்கமாகும்.

இது பொங்கல் பண்டிகையின் முதல் நாள் ஆகும். அது ஜனவரி 13ஆம் திகதி போகி கொண்டாடப்படுகிறது.

## தைப்பொங்கல்

புதுப்பானையில் புதிய அரிசியை இட்டுப் பொங்கல் இடுவர். விவசாயத்துக்குக் காரணமாக இருந்த கதிரவனுக்கு சூரிய பொங்கல் படைப்பர். வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல் என இரு பானைகளில் பொங்கல் பொங்கி வழிபடுவது வழக்கம். ஒவ்வொரு ஆண்டும் தமிழுக்கு தை முதல் நாளில் கொண்டாடப்படுகிறது .அதாவது இவ்வருடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பொங்கல் கொண்டாடப்படுகிறது.

## மாட்டுப்பொங்கல்

மூன்றாவது நாள் மாட்டுப் பொங்கலைக் கொண்டாடுவார்கள்.இந்நாளில் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு சில இடங்களில் வீர விளையாட்டாக நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் தை இரண்டாம் நாளில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

இவ்வாண்டு மாட்டுப்பொங்கல் காலை ஒன்பது மணி முதல் 10 .20 வரை அல்லது 11 மணி முதல் 12 30 வரை தவறினால் 1.30 முதல் 2.30 வரை கொண்டாடலாம்.

அன்று முன்னோர்கள் மூத்தவர்கள் நினைவாகவும் வழிபடலாம். கோசாலை சென்று பசுவைக் கழுவி அலங்கரித்து பசுவுக்கு உணவளித்துக் கொண்டாடலாம்.

## காணும் பொங்கல்


நான்காம் நாள் காணும் பொங்கலாகும். இந்நாளில் நண்பர்களும் உறவினர்களும் ஒருவரை ஒருவர் காணும் நாளாகும். ஒவ்வொரு ஆண்டும் தை மூன்றாம் நாளில் அதாவது வியாழக்கிழமை காணும் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

அதே நேரத்தில், தைத்திருநாள் என்பது ஜோதிட ரீதியாகவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும்.

தேவர்களின் இரவு காலமான தட்சிணாயன காலம் மார்கழி மாத இறுதி நாளோடு முடிகிறது. தை மாதம் ஒன்றாம் தேதி சூரியன் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு செல்வார். சூரியன் மகர ராசிக்கு பெயர்ச்சியாகும் அன்றுதான் தை 1, பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

இது தான் வட மாநிலங்களில் மகர சங்கராந்தி என்றும், தென் மாநிலங்களில் ஒரு சில இடங்களில் சங்கராந்தி என்றும் அழைக்கப்படுகிறது. மகர சங்கராந்தி என்பது தேவர்களின் பகல் காலத் தொடக்கமான உத்திராயண புண்ணிய காலத்தைக் குறிக்கிறது.

இத்தனை சிறப்பு மிக்க பொங்கல் திருநாள் அன்று அனைவரும் பாரம்பரிய முறையில் பொங்கல் கொண்டாடி மகிழ்வோம்.









### 144 ஆண்டுகளுக்கு பிறகு நடக்கும்

# மகா கும்பமேளா



மகா கும்பமேளா என்பது இந்தியாவில் நடைபெறும் மிக பிரம்மாண்ட விழாக்களில் முதன்மையானதாகும். கும்பமேளா பற்றி பலருக்கும் முழு விபரங்கள் தெரியாமல் இருக்கும். இந்த விழா எதற்காக நடத்தப்படுகிறது என்பது கூட பலருக்கும் தெரியாது. இதன் சிறப்பு தெரியாதவர்களுக்கு இந்த கட்டுரை உதவியாக இருக்கும்.

மகா கும்பமேளா விழா அன்று என்ன செய்ய வேண்டும்? மகா கும்பமேளா விழாவில் கலந்து கொள்ள முடியாதவர்கள் என்ன செய்யலாம்? அப்படி மகா கும்பளேளா விழாவில் கலந்து கொண்டால் என்ன பலன் கிடைக்கும் என்ற தகவல்களை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

## மகா கும்பமேளா

உலகின் மிகப் பெரிய விழாவாகவும், அதிகமான மக்கள் கூடும் விழாவாகவும் யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்டுள்ள விழா இந்தியாவின் பிரயாக்ராஜில் நடைபெறும் கும்பமேளா தான். சன்னியாசிகள், துறவிகள், சாமானிய மக்கள், ஆண்கள், பெண்கள், வேத பண்டிதர்கள் என கோடிக் கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் திருவிழாவாகக் கும்பமேளா கருதப்படுகிறது. கும்பமேளா திருவிழா ஹரித்வார், பிரயாக்ராஜ், உஜ்ஜைனி மற்றும் நாசிக் ஆகிய நான்கு இடங்களில் தான் நடத்தப்படும். இருந்தாலும் பிரயாக்ராஜில் நடைபெறும் கும்பமேளா தான் பிரசித்தி பெற்றதாக திகழ்கிறது.

## கும்பமேளா வகைகள்

மொத்தம் நான்கு வகையான கும்பமேளாக்கள் உள்ளன. அதாவது ஆர்த் கும்பமேளா, பூர்ண கும்பமேளா, மக் கும்பமேளா மற்றும் மகா கும்பமேளா உள்ளன. இவை ஒவ்வொன்றிற்கும் வித்தியாசம் உள்ளது.

* ஆர்த் கும்பமேளா - 6 வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுவது. இது ஹரித்வார் மற்றும் பிரயாக்ராஜில் நடத்தப்படும்.

* பூர்ண கும்பமேளா - இது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஹரித்வார், பிரயாக்ராஜ், நாசிக், உஜ்ஜைனி ஆகிய நான்கு இடங்களிலும் நடத்தப்படும்.

* மக் கும்பமேளா - இது ஆண்டுதோறும் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் நடத்தப்படும். இது பிரயாக்ராஜில் மட்டுமே நடத்தப்படும். இதைச் சேட்டா கும்பமேளா என்றும் சொல்லுவதுண்டு.

* மகா கும்பமேளா - இது தான் 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுவது. 12 பூர்ண கும்பமேளாக்களுக்குப் பிறகு நடத்தப்படும். இது பிரயாக்ராஜில் மட்டுமே நடத்தப்படும்.

## கும்பமேளா தோன்றிய வரலாறு

அமிர்தத்தைப் பெறுவதற்காகத் தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது, பல்வேறு தெய்வீகத் தன்மை கொண்ட பொருட்களைத் தொடர்ந்து அமிர்தம் கிடைத்தது. அது அசுரர்களுக்குக் கிடைத்து விடக் கூடாது என்பதற்காக மகாவிஷ்ணு, மோகினி அவதாரம் எடுத்து அமிர்த கலசத்தை (கும்பம்) எடுத்துச் சென்றார். அப்போது அமிர்தத்தின் சில துளிகள் பூமியில் சிந்தி, அவைகள் ஹரித்வார், பிரயாக்ராஜ், உஜ்ஜைனி, காசி ஆகிய நான்கு புனித நகரங்கள் தோன்றிய. இதன் நினைவாகக் கொண்டாடப்படுவதே கும்பமேளா ஆகும்.



கும்பமேளா அன்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுவது மிக மிக சிறப்பானதாகும்.

## மகா கும்பமேளா 2025 திகதி

மகர சங்கராந்தி ஆரம்பமாகி, மகா சிவராத்திரி வரையிலான 44 நாட்கள் இந்த மகா கும்பமேளா நடத்தப்படும். நவகிரகங்களில் சில குறிப்பிட்ட சுப கிரகங்கள், நட்சத்திரங்கள் ஒரே நாளில் ஒரே நேர்க்கோட்டில் இணையும் நாளிலேயே இந்த மகா கும்பமேளா நடத்தப்படும். அப்படி ஒரு அற்புதமான நாள் இந்த ஆண்டு வர உள்ளது. ஜனவரி 13ஆம் திகதி ஆரம்பமாகி, பெப்ரவரி 26ஆம் திகதி வரை நடைபெறும் மகா கும்பமேளாவின் போது, கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினால் அனைத்து விதமான பாவங்களும் நீங்கும். மோட்சம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

## மகா கும்பமேளா 2025 நிகழ்வுகள்

மகா கும்பமேளாவின் போது, பலவிதமான சடங்குகள் நடத்தப்படும். யானைகள், குதிரைகள், இரதங்கள், மின்னும் வாள்கள் ஆகியவற்றிற்குப்



பூஜை செய்து ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். ஜனவரி 13ஆம் திகதி பௌர்ணமி ஸ்நானத்துடன் ஆரம்பமாகும் மகா கும்பமேளாவில் ஜனவரி 15ஆம் திகதி மகர சங்கராந்தி ஸ்நானம், ஜனவரி 29இல் அமாவாசை ஸ்நானம், பெப்ரவரி 3இல் வசந்த பஞ்சமி ஸ்நானம், பெப்ரரவரி 12இல் மகி பௌர்ணமி ஸ்நானம், பிப்ரவரி 26ஆம் திகதி மகா சிவராத்திரி ஸ்நானம் ஆகியவற்றுடன் மகா கும்பமேளா இந்த ஆண்டு நிறைவடைய உள்ளது.



## முடியாதவர்கள் செய்ய வேண்டியவை

இந்த ஆண்டு மகா கும்பமேளாவில் 35 முதல் 40 கோடி வரையிலான மக்கள் கலந்து கொள்வார்கள், கலந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே அகோரிகளும், சாதுக்களும், துறவிகளும் பிரயாக்ராஜில் குவிய ஆரம்பித்து விட்டனர். கலாசார நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், உணவு கடைகள் என கோலாகலமாக நடைபெறவுள்ள மகா கும்பமேளாவில் கலந்து கொண்டு கோடிக்கணக்கானவர்கள் புனித நீராடவுள்ளனர். இதனால் பிரயாக்ராஜ் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள், கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 144 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் மகா கும்பமேளாவில் கலந்து கொண்டு நாமும் புனித நீராடினால் நம்முடைய பாவங்கள் நீங்கி, மோட்சம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. பிரயாக்ராஜ் செல்ல முடியாதவர்கள் தங்கள் பகுதியில் உள்ள புனித நதிகள், திரிவேணி சங்கமங்களில் புனித நீராடி, மகா கும்பமேளாவில் கலந்து கொண்ட பலனை பெறலாம்.

## 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடுவது ஏன்?


தேவர்களின் காலத்தைப் பொறுத்தவரை ஒருநாள் என்பது பூலோகத்திற்கு ஒரு ஆண்டு என்பதாகும் புராணக் கதையின்படி, தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் 12 நாட்கள் யுத்தம் நடந்தது அதன் பன்னிரண்டாவது நாள் முடிவில் தான் அமிர்த கலசம் தேவர்களுக்குக் கிடைத்தது. அப்பொழுது அந்தக் கலசத்திலிருந்து நான்கு துளிகள் விழுகின்றன. அந்த இடங்கள் தான் பிரயாக்ராஜ் ,ஹரித்துவார், உசைன், நாசிக் ஆகும். இதனைக் கொண்டாடும் விதமாகத்தான் கும்பமேளா 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.


மேலும் ஏழாம் நூற்றாண்டில் யுவான்சுவாங் இந்தியா வந்தபோது, பிரயாக்ராஜில் நடைபெற்ற கும்பமேளாவில் கலந்து கொண்டதாகத் தனது பயணக் குறிப்பில் எழுதியுள்ளார். ஆகவே, இது மிகவும் பழமை வாய்ந்த கொண்டாட்டமாகவும் உள்ளது. இந்த பிரபஞ்சத்திலேயே மாபெரும் சங்கமம் என்றால் இந்த மகா கும்பமேளா தான். இவ்வளவு சிறப்பு மிக்க இந்த ஆன்மீக திருவிழாவில் அனைவரும் கலந்து கொண்டு அதன் புனித பலனை பெறுவோம்.

## நவீன தொழில்நுட்பம்

நீருக்கடியில் செயல்படும் 113 ட்ரோன்கள், 2,700 செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) கேமராக்கள் உட்பட நவீனத் தொழில்நுட்பங்களும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மாநில பொலஸாருடன் தேசியப் பாதுகாப்புப் படையினர் (என்.எஸ்.ஜி.), தீவிரவாத தடுப்புப் படையினர் (ஏ.டி.எஸ்.) உள்ளிட்டோரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஜனவரி 14 (மகர சங்கராந்தி), 29 (மவுனி அமாவாசை) மற்றும் பெப்ரவரி 3 (வசந்த பஞ்சமி) ஆகிய 3 தினங்கள் புனித நீராடலுக்கான சிறப்புத் தினங்கள் ஆகும். இந்த நாட்களில் கூட்டும் வழக்கத்தைவிட அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நன்றி: இணையம்)







ஆபிரிக்கா

அங்கோலாவில் கொலரா தொற்று:

# 12 பேர் பலி

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான அங்கோலாவில், கொலரா தொற்றுக்குள்ளாகி, 12 பேர் உயிரிழந்துள்ளதாக, அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அங்கோலா நாட்டில் கொலரா தொற்று பரவி வருவதாக கூறப்படுகின்றது. இதில், கடந்த செவ்வாய்க்கிழமை (7),



முதன்முறையாகத் தொற்று பதிவு உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், அடுத்தடுத்து தொற்று பரவி 170 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு நடந்த பரிசோதனையில், 14 பேருக்குத் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது. 12 இலட்சம் பேர் வசிக்கக் கூடிய லுவாண்டா மாகாணத்தில் ககுவாகோ புறநகர்ப் பகுதியில், கொலரா தொற்று பரவி வருவதாக கூறப்படுகின்றது. இவ்வாறு கொலரா தொற்றுக்கு 12 பேர் உயிரிழந்துள்ளனர்.



பங்களாதேஷ்

எல்லை விவகாரம்:

## இந்தியாவுக்கு பிடியாணை

இந்தியா-பங்களாதேஷ் எல்லை விவகாரம் குறித்து, இந்திய தூதுவருக்கு பங்களாதேஷ் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியா-பங்களாதேஷ் ஆகிய நாடுகள் 4,096 கிலோமீற்றர் நீளமுடைய எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. இது உலக அளவில் 5ஆவது அதிக நீளமுள்ள எல்லையாக கருதப்படுகிறது.

பங்களாதேஷ் எல்லை வழியாக நம் பகுதிக்குள் ஊடுருவல், கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் நடப்பதைக் கட்டுப்படுத்த முள்வேலி அமைக்கும் பணியில் மத்திய அரசு ஈடுபட்டது.

அதுமட்டுமின்றி, பங்களாதேஷில் சிறுபான்மையினர்களான இந்துக்கள் மீதான தாக்குதலுக்கு இந்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்தது.

இதற்கிடையே, இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் 5 இடங்களில் இந்தியா இருதரப்பு ஒப்பந்தத்தை மீறி வேலிகள் அமைக்க முயற்சிப்பதாக, பங்களாதேஷ் அரசு குற்றஞ்சாட்டியது.

இந்நிலையில், இது தொடர்பாக நேரில் விளக்கம் தரக்கோரி அடுத்த சில மணி நேரத்திலேயே இந்திய தூதுவருக்கு பிடியாணை அனுப்பியுள்ளது.

சீனா

## திபெத்தில் மீண்டும் நிலநடுக்கம்


சீனாவின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக திபெத்தில், ஞாயிற்றுக்கிழமை (12) மீண்டும் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (12) பகல் 1 மணியளவில் (இலங்கை நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.1ஆக பதிவானதாக, அந்நாட்டுத் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 28.58 டிகிரி வடக்கு அட்ச ரேகையிலும், 87.49 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

ஏற்கெனவே, திபெத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை(7), பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்நாட்டின் ஷிகாட்சே நகரை மையமாகக் கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. திபெத்தில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 120க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.





பெங்களூரு

## பசுக்களின் மடியை வெட்டியவர் கைது

பெங்களூரு - சாம்ராஜ்பேட்டை அருகே காட்டன்பேட்டை பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட பழைய பென்சன் மொகல்லா பகுதியில், 3 பசுக்களின் மடியை வெட்டிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பழைய பென்சன் மொகல்லா பகுதியில் வசித்து வரும் நபர் ஒருவர், 3 பசு மாடுகளை வளர்த்து வந்தார்.

அந்த பசுக்கள் பழைய பென்சன் மொகல்லா வீதி, அங்குள்ள வினாயகா திரையரங்கு பகுதிகளில் இரை தேடிச் சுற்றித்திரிவது வழக்கம். அதுபோல், சனிக்கிழமை (11) நள்ளிரவும் 3 பசு மாடுகளும் திரையரங்கு பின்புறம் சுற்றித்திரிந்தது.

அந்த சந்தர்ப்பத்தில் அங்கு வந்த மர்மநபர்கள், 3 பசு மாடுகளின் பால்மடியை பிளேடால் அறுத்ததாகத் தெரிகிறது. இதனால் பசுக்களின் பால்மடியிலிருந்து இரத்தம் வெளியேறியபடி இருந்தது.

இதையடுத்து, ஞாயிற்றுக்கிழமை (12) காலையில், பசுக்களின் பால்மடி அறுக்கப்பட்டும், இரத்த காயங்களுடனும் சுற்றித்திரிவதைப் பார்த்து பசுக்களின் உரிமையாளர் கர்ணா மற்றும் அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்த சம்பவத்தை அடுத்து, பா.ஜ.கவினர் மற்றும் இந்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் அங்கு விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில், 3 பசுக்களின் மடியை வெட்டிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்டவரை 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்குமாறு, நீதிபதி உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட நபர், குற்றம் செய்தபோது குடிபோதையிலிருந்ததாக பொலிஸார் தரப்பில் கூறப்படுகிறது.

பசுவின் உரிமையாளருக்கு ஏற்பட்ட நட்டத்துக்கு அரசு ரூ.5 இலட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று, அம்மாநில பா.ஜ.க. தலைவர் ரவிக்குமார் கூறியுள்ளார்.

உத்தரபிரதேசம்

தலைக்கவசம் அணியாதோருக்கு

## இனி பெற்றோல் இல்லை

மோட்டார் சைக்கிள் செலுத்துவோர்கள் தலைக்கவசம் அணிவதைக் கட்டாயமாக்க உத்தரப்பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கமைய, உத்தரப்பிரதேசத்தில் தலைக்கவசம் அணியாத மோட்டார் சைக்கிள் செலுத்துவோர்களுக்கு பெற்றோல் வழங்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் மாநில போக்குவரத்து கமிஷனர் பிரஜேஷ் நராயண் சிங் கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில்,“வீதி பாதுகாப்பு தொடர்பாக இந்த மாத தொடக்கத்தில் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் நடத்திய ஆய்வுக்கூட்டத்தில், விபத்துகள் அதிகரித்து வருவதும், ஆண்டுக்கு 25 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழப்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. இதில் பெரும்பாலானவர்கள் இருசக்கர வாகன ஓட்டிகள் என்பதும், ஹெல்மெட் அணியாததால் இந்த உயிரிழப்புகள் நடைபெறுவதும் கண்டறியப்பட்டது.

எனவே, மோட்டார் சைக்கிள் செலுத்துவோர்கள் தலைக்கவசம் அணிவதைக் கட்டாயமாக்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்காகத் தலைக்கவசம் அணியாதவர்களுக்கு பெற்றோல் இல்லை என்ற கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த கொள்கை ஏற்கெனவே கவுதம் புத்த நகர் மாவட்டத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால், அவ்வப்போது கடைப்பிடிக்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது. எனவே, இந்த கொள்கையை அனைத்து மாவட்டங்களும் தீவிரமாக அமல்படுத்த வேண்டும் , இதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும். இது தொடர்பாக சமூக வலைத்தளங்கள், ஊடகங்கள் உள்ளிட்ட தளங்கள் மூலம் விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும்” என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




ஸ்பானிய சுப்பர் கிண்ணத் தொடர்:

# மட்ரிட்டை வீழ்த்தி சம்பியனான பார்சிலோனா



ஸ்பானிய சுப்பர் கிண்ணத் தொடரில் பார்சிலோனா சம்பியனானது.

சவூதி அரேபியாவின் ஜெடாவில் திங்கட்கிழமை (13) நள்ளிரவு நடைபெற்ற றியல் மட்ரிட்டுட்னான இறுதிப் போட்டியில், 5-2 என்ற கோல் கணக்கில் வென்றே பார்சிலோனா சம்பியனானது.

பார்சிலோனா சார்பாக றபீனியா இரண்டு கோல்களையும், லமீன் யமால், றொபேர்ட் லெவன்டோஸ்கி, அலெஜான்ட்ரோ பல்டே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். மட்ரிட் சார்பாக கிலியான் மப்பே, றொட்றிகோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



பரிஸ் ஸா ஜெர்மைலிருந்து

## விலகும் டொன்னருமா?

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் கோல் காப்பாளரான ஜல்லூயிஜி டொன்னருமா அக்கழகத்திலிருந்து வெளியேறுவாரெனக் கூறப்படுகிறது.

பரிஸ் ஸா ஜெர்மைனின் முகாமையாளர் லூயிஸ் என்றிக்கேயுடனான மோசமான உறவு காரணமாகவே 25 வயதான டொன்னருமா வெளியேறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனிலிருந்து 2021ஆம் ஆண்டு இணைந்த பரிஸ் ஸா ஜெர்மைனில் இணைந்த டொன்னருமா, ஏ.சி மிலனின் பரம வைரிக் கழகமான இன்டர் மிலனில் இணைவதற்கு ஊதியத்தைக் குறைப்பதற்கு தயாராகவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க சவால் கிண்ணத் தொடர்:

## யுனைட்டெட்டிடம் தோற்று வெளியேறிய ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க சவால் கிண்ணத் தொடரிலிருந்து ஆர்சனல் வெளியேற்றப்பட்டுள்ளது.

தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான போட்டியில் பெனால்டியில் தோற்றே ஆர்சனல் வெளியேறியிருந்தது.

போட்டியின் வழமையான நேரத்திலும், மேலதிக நேர முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்று சமநிலையில் காணப்பட்ட நிலையில் பெனால்டியில் 5-3 என்ற ரீதியில் யுனைட்டெட் வென்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை கப்ரியல் பெற்றதோடு, யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ப்ரூனோ பெர்ணாண்டஸ் பெற்றிருந்தார்.

பெனால்டியில் யுனைட்டெட்டின் பெர்ணாண்டஸ், அமட் டியல்லோ, லெனி யொரோ, லிஸான்ட்ரோ மார்டினெஸ், ஜொஷுவா ஸிர்க்ஸீ ஆகியோர் தமதுதைகளை கோல் கம்பத்துக்குள் செலுத்தியிருந்தனர். ஆர்சனலின் மார்டின் ஒடெகார்ட், டெக்லன் றைஸ், தோமஸ் பார்ட்டி ஆகியோர் தமதுதைகளை உட்செலுத்திய நிலையில் கை ஹவேர்ட்ஸின் உதையை யுனைட்டெட்டின் கோல் காப்பாளர் அல்டே பயின்டிர் தடுத்திருந்தார்.




அவுஸ்திரேலிய குழாமில்

## மக்குர்க் இல்லை

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான அவுஸ்திரேலியக் குழாமில் ஓட்டங்களைப் பெற்றிருக்காத ஜேக் பிறேஸர்-மக்குர்க் இடம்பெறவில்லை.

குழாம்: பற் கமின்ஸ் (அணித்தலைவர்), அலெக்ஸ் காரி, நாதன் எலிஸ், ஆரோன் ஹார்டி, ஜொஷ் ஹேசில்வூட், ட்ரெவிஸ் ஹெட், ஜொஷ் இங்லிஸ், மர்னுஸ் லபுஷைன், மிற்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், மத்தியூ ஷோர்ட், ஸ்டீவன் ஸ்மித், மிற்செல் ஸ்டார்க், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், அடம் ஸாம்பா.



## ஏ.சி. மிலன் செல்லும் வோக்கர்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் பின்களவீரரான கைல் வோக்கரைக் கைச்சாத்திடுவதில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி. மிலன் முன்னிலையிலுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிற்றியை விட்டு வெளியேற விரும்புவதாக 34 வயதான வோக்கர் தெரிவித்துள்ள நிலையில், எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரையில் அக்கழகத்துடன் அவர் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் மிலனானது எதிர்வரும் 2027ஆம் வரையில் ஒப்பந்தத்தை வழங்கத் தயாராகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர ஏ.சி மிலனின் பரம வைரியான இன்டர் மிலனில் ஓராண்டுக்கு கடனடிப்படையில் வோக்கர் இணையலாமெனவும் கூறப்படுகிறது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 14, ஜனவரி 2025, இல.08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.